## றவூப் ஸெய்ன்

2520

சமூக விஞ்ஞானங்களுக்கான இப்னு கல்தூன் ஆய்வகம்

# சிங்கள - முஸ்லிம் இனமோதல்கள்

---

## ஒரு சமூக-அரசியற் பார்வை

29/04/2007
2520

# சிங்கள-முஸ்லிம் இனமோதல்கள்
# ஒரு சமூக-அரசியற் பார்வை

'HATHIBUL RUTHA'
M.M.M. NOORULHAGU J.P
DIPLOMA IN MASS MEDIA
FREELANCE JOURNALIST & WRITER
129B, OSMAN ROAD,
SAINTHAMARUTHU - 05

ரவூப் ஸெய்ன்

சமூக விஞ்ஞானங்களுக்கான இப்னு
கல்தூன் ஆய்வகம்

Hizbul Islam Trust
Islamic Book House
77, Dematagoda Road,
Maradana, Colombo-09
Tel : 011 2684851, 011 2069197
Fax: 011 2688102

title: sinhala-muslim inamothalkhal (sinhala-muslim ethnic riots) in tamil, author: rauff zain, pages: 65, published by: ibnu kaldoon research institute for social sciences, typeset & layout fr graphics-thihariya, copies 500, copyright© author, price Rs. 100.00

all rights reserved, no part of this publication may be reproduced, stored, in retrieval system, or transmitted in any form of by any means - electronic, mechanical, photocopying, recording, or other wise - without the prior permission of the author.

# ஆவணவாக்கல் முயற்சியும் முஸ்லிம் சமூகமும்

மூன்றாண்டுகளுக்கு முன்னர் மேற்கொண்ட ஒரு ஆவணவாக்கல் முயற்சி இப்போதுதான் நூலாக வெளிவருகின்றது. சுமார் 40 மாதங்கள் (10 மாதங்கள் முஸ்லிம் தகவல் நிலையத்தில்) Tracing peper ல் தேங்கிக் கிடந்த இந்நூல் இப்போதாயினும் வெளிவருவதையிட்டு மன ஆறுதல் அடைகிறேன். நூல் வெளியீடு என்பது அதிலும் குறிப்பாக சமூக-அரசியல், மானிடவியல் சார்ந்த ஆய்வு முயற்சிகளை நூலாகக் கொண்டு வருதல் என்பது கல்லில் நாருரிக்கும் கடினமான பணி. மூலாதார ஆவணங்களைத் தேடி கையில் பணத்தை வைத்துக் கொண்டு கடைகடையாக ஏறி இறங்கினாலும் இலங்கை முஸ்லிம்களின் சமூக, அரசியல், வரலாறு குறித்த நூல்களையோ, கையேடு களையோ காண்பது மிகச் சிரமமானது. ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது முஸ்லிம்கள் தொடர்பாக எழுதப்பட்ட ஆய்வு நூல்கள் மிகவும் சொற்ப மானவை என்பதில் மாற்று அபிப்பிராயம் இருக்க முடியாது. முஸ்லிம்கள் குறித்து எழுதப்பட்டவற்றிலும் பெரும்பாலானவை முஸ்லிமல்லாத ஆய்வாளர் களுக்குரியவை. கே.எம்.டி. சில்வா, எப்.ஆர்.டி. சில்வா, குமாரி ஜயவர்தன, லோனா தேவராஜா, வசுந்தரா மோகன், வாமதேவன், கா. சிவத்தம்பி போன் றோர் முஸ்லிம் சமூகத்தின் வரலாற்று அரசியல் தளத்தில் மேற்கொண்டளவு ஆய்வு முயற்சிகளில் இந்த சமூகத்தின் சொந்த அறிவு ஜீவிகள் கூட கவனம் குவித்ததில்லை என்பது மிகவும் கசப்பான உண்மையாகும். இந்த வரலாற்று அனுபவங்களிலிருந்து எதையும் நாம் கற்றுக் கொள்ளவில்லை என்பது அதைவிட சோகமானது.

ஆய்வு முயற்சிகளுக்கென ஒரு கூட்டு செயற்பாட்டுத்தளத்தை இன்னும் நாம் உருவாக்கிக் கொள்ளவில்லை. நிறுவன ரீதியான ஆய்வு முயற்சிகள் என்று குறிப்பிட்டுக் கூறக்கூடிய எதுவும் இங்கு இடம்பெற்றதாகத் தெரிய வில்லை. இன்று முஸ்லிம் சமூகத்தில் ஓரிரண்டு நிறுவனங்கள் பெயரளவில் உள்ளன. ஆனால் அவை கூட முஸ்லிம்கள் குறித்து எதுவும் செய்ததாகத்

தெரியவில்லை. ஏதோ வெளிநாட்டு நிதிக்காக பெயர்ப்பலகை போடும் நிறுவனங்களாகவே இயங்குகின்றன. பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் முஸ்லிம் புத்திஜீவிகள் சிலர் Projects சார்ந்த ஆய்வுகளைச் செய்தும் செய்து கொண்டும் இருக்கின்றனர். ஆனால் அவை வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவானவை. அவை இலங்கை முஸ்லிம்கள் தொடர்பானவையுமல்ல.

ஆய்வு முயற்சிகள் எப்படியாயினும் ஆவணப்படுத்தல் முயற்சிகள் கூட நிறுவன ரீதியானவையல்ல. முஸ்லிம் சமூகம் தொடர்பான விலாவாரியான தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் பெறக்கூடியதான ஒரு ஆவணக் காப்பகத்தையேனும் நாம் ஸ்தாபிக்கவில்லை. இன்று முஸ்லிம் சமூகத்தில் ஓயிரண்டு தனிநபர்கள் தமக்கு ஈடுபாடுள்ள துறை குறித்து சில தகவல் களைச் சேர்த்து வைத்துள்ளனர். அதுகூட அரசசார்பற்ற பணப் பெருச்சாளி களின் தயவு தாட்சண்யத்தில்தான் கைகூடியது. தமக்கென ஒரு அஜென் டாவை வைத்துக் கொண்டு இத்தகைய நிறுவனங்கள் பணியாற்றுகின்றன.

நமது சமூக அரங்கில் செயற்படும் சேவை நிறுவனங்கள் எதுவுமே பரந்துபட்ட பொதுசனக் கவனயீர்ப்பைப் பெறவில்லை என்பதை இந்நிறு வனங்கள் விரும்பியோ/விரும்பாமலோ ஏற்க வேண்டியதாகிவிட்டது. அதற்கான நியாயம்; சமூகத்தின் முதன்மையான தேவை எது என்பதில் தூர நோக்கும் தெளிந்த பார்வையும் இன்றி அவை செயற்படுவதுதான். இன்று நமக்கு மத்தியில் மத்திய கிழக்கு அறபு நாடுகளின் நிதி மூலங்களில் தங்கி நின்று பணி புரியும் பல நிறுவனங்கள் இயங்குகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை பள்ளி கட்டுவதிலும் மத்ரஸாக்கள் அமைப்பதிலும் காட்டும் பிடிவாதத்தைப் பார்க்கும்போது ஆச்சரியத்தைத் தருகின்றது. கல்வி, கலாசார செயற்பாடுகள். ஆய்வு நிகழ்ச்சிகள், ஆவணப்படுத்தல் முயற்சிகளுக்கு இந்நிறுவனங்களிட மிருந்து நிதி பெறுவதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. ஈச்சம்பழ வினியோகத்திலும், உழ்ஹிய்யா கொடுப்பதிலும் அவை காட்டும் ஆர்வத்தின் கால்பங்கு கூட கல்வித்துறைக்குக் காட்டவில்லை.

நமது சமூகத்திலுள்ள புலமைத்துவ ஓட்டாண்டித்தனத்தின் (Intellectual Bankrupcy) குறியீடுகளாக இவற்றைக் கருதலாம். மொத்தத்தில் நமது வரலாறு, சமூகவியல், பண்பாடு, மானிடவியல் பற்றிய எந்தப் பிரக்ஞையும் இல்லாது, கல்யாண வீட்டு புர்யாணியுடனும் கலர் கலர் கனவுகளுடனும் வாழும் ஒரு வீணான சமூக அமைப்பு இது. ஆடம்பரம், போலிப் பகட்டு, வரட்டு கௌரவம்

போன்ற மேலெழுந்தவாரியான பண்பியல் ஆதிக்கம் நமது சமூகத்தில் மேலோங்கி இருக்கும் அளவுக்கு கல்விக்கும் அறிவார்ந்த முயற்சிகளுக்கும் எந்தப் பெறுமானமும் இல்லாமலேயே போய்விட்டது.

இத்தகைய அவலத்தனமான சூழ்நிலையில்தான் இந்த நூலை ஒரு ஆவணமாக சமர்ப்பிக்க முயல்கின்றேன். இதுவோர் ஆய்வு நூல் என்று ஒரு எளிய முயற்சியை மேல் மதிப்பீடு செய்ய நான் விரும்பவில்லை. எனினும் வழமை போன்று ஆயிரம் அலைக்கழிச்சல்களுடனும் பத்தாயிரம் பெருமூச்சு களுடனும்தான் இந்நூலும் உங்களை வந்து சேர்வதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1915ம் ஆண்டில் கம்பளையில் ஏற்பட்ட இனவன்முறை முதல் அண்மையில் தர்கா நகரில் இடம்பெற்ற கலவரம் வரை பல வன்முறை களை நாம் சந்தித்து வந்துள்ளோம். இவற்றுள் சிலவற்றை மட்டும் தொகுத்து இந்நூல் வெளிவருகின்றது. இந்நூல் கள ஆய்வுகளை உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

**ரவூப் ஸெய்ன்**

**2006-02-28**

# பொருளடக்கம்


❑ சிங்கள - முஸ்லிம் இன முரண்பாடுகள் ஒரு சமூக - வரலாற்றுப் பார்வை 01

❑ கம்பளைக் கலவரம் - 1915 இருபதாம் நூற்றாண்டின் முதற்பெரும் இனமோதல் 12

❑ காலி கலவரம் - 1982 24

❑ பன்னல-அலபெடகம வன்முறைகள் - 1999 29

❑ மாவனல்லைத் தாக்குதல் - 2001 இனவாதப் பாசிஸத்தின் இன்னொரு கோர முகம் 36

❑ பேருவளை இனமோதல் - 2002 58



# சிங்கள - முஸ்லிம் இன முரண்பாடுகள்

## ஒரு சமூக-வரலாற்றுப் பார்வை

பன்மைத்துவ சமூக அமைப்பைக் கொண்ட இலங்கை பல்வேறு மக்கள் தொகுதியினை உள்ளடக்கியிருப்பது அதன் சிறப்பியல்புகளில் ஒன்று எனலாம். ஸ்ரீலங்கா என்ற தேசிய அடையாளத்திற்குள் பிரத்தியேகமான இன, பண்பாட்டு உப அடையாளங்களைக் கொண்ட சமூகக் குழுமங்கள் இந்நாட்டில் மிக நீண்டகாலமாகவே சமாதானமாகவும் அமைதியாகவும் வாழ்ந்து வந்தன. எனினும் ஆங்கிலேயரிடமிருந்து அரசியல் சுதந்திரம் பெற்ற காலம் முதல் இங்குள்ள இன வேறுபாடுகளும் பேதங்களும் வெளித்தள்ள ஆரம்பித்தன. பெரும்பான்மை சமூக அரசியல் கைக்கொண்ட அணுகுமுறையினால் இத்துரதிஷ்டமான நிலை தோன்றியது. அதன் விளைவாக இலங்கைப் பவளத்தீவு ஒரு இரத்தத் தீவாக மாறும் அளவுக்கு சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளும் மோதல்களும் வளர்ந்து வந்தன.

பரஸ்பர சந்தேகங்களாகவும் பகையுணர்வாகவும் வளர்ந்து வந்த அம்முரண்பாடுகள் பெரும் இனக்கலவரங்களாகவும் யுத்தமாகவும் வெடிக்கும் அளவிற்கு இட்டுச் சென்றன. தேசிய அரசியலில் நாம் எதிர்நோக்கியுள்ள இந்த துர்பாக்கிய நிலையிலிருந்து இதுவரை மீளவில்லை என்பதே மிகவும் துரதிஷ்டமான விடயம். ஏனெனில் இத்தகைய எதிர்ப்புணர்வலைகளும் குரோதமும் அவ்வப்போது வன்முறையாக வெளிப்படுகின்றன. சிங்கள-முஸ்லிம், தமிழ்-முஸ்லிம், சிங்களத்-தமிழ் என அதன் பரிமாணங்கள் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பட்டு நிற்கின்றன.

இப்பின்புலத்தில் சிங்கள இனப் பகை முரண்பாட்டின் பரிமாணங் களைப் புரிந்து கொள்வதும் கடந்த காலத்தில் அம்முரண்பாடுகள் தலைதூக்க வழிகோலிய வரலாற்றுக் காரணங்களைப் பரிசீலிப்பதும் முக்கியமாகின்றது. இந்நாட்டின் எதிர்கால நம்பிக்கை அடிவானங்களைக் கவ்வியிருக்கும் இனவாதக் காரிருளைக் களைந்து அமைதியை நோக்கிப் பயணிக்க வேண்டிய வரலாற்றுக் காலகட்டத்தை அடைந்திருக்கும் நாம் இக்கொடிய அறைகூவலின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வது மிகப் பயனுள்ளதாக அமையும்.

இலங்கையில் இதுவரை தோன்றிய சிங்கள-முஸ்லிம் இனவன்முறைக ளுக்கான காரணங்களைத் தேட முனைகின்ற எவரும் முஸ்லிம்களின் கடந்தகால பொருளாதார, அரசியல் நிலைகளை நுணுகி நோக்குவது இன்றியமையாதது.

போர்த்துக்கேயர் (1505) மற்றும் ஒல்லாந்தர் (1658) ஆட்சிக்காலம் இலங்கை முஸ்லிம்களின் பொருளாதார, அரசியல் வாழ்வில் பெரும் நெருக்கடிகளைக் கொண்டுவந்தது. உள்நாட்டு வர்த்தகத்தில் முஸ்லிம்கள் பெற்றிருந்த ஆதிக்கத்தையும் சர்வதேச ரீதியில் அவர்கள் கொண்டிருந்த செல்வாக்கினையும் கண்டு ஆத்திரமடைந்த போர்த்துக்கேயர் முஸ்லிம்கள் மீது பல்வேறு அழுத்தங்களையும் நெருக்குவாரங்களையும் திணித்தனர். மிக இறுக்கமான வணிகக் கொள்கைகளையும் கட்டுப்பாடுகளையும் அவர்கள் மீது விதித்தனர். முஸ்லிம்களின் வர்த்தகச் செல்வாக்கினை முறியடிப்பதே அவர்களின் நோக்காக இருந்தது.[1]

கி.பி. 1796ல் இலங்கையின் கரையோரப்பகுதிகளைக் கைப்பற்றி பின்னர் கண்டியைத் தமது முழு ஆளுகையின் கீழ் கொண்டுவந்த பிரித்தானியர்க ளின் வருகையைத் தொடர்ந்து முஸ்லிம்கள் மீதிருந்த கட்டுப்பாடுகளும் இறுக்கங்களும் தளர்த்தப்பட்டதோடு சுதந்திரமான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பம் அவர்களுக்கு மீண்டும் ஏற்பட்டது. இதனால் கொழும்பு, களுத்துறை, காலி போன்ற கரையோரப்பகுதிகளிலிருந்து போர்த்துக்கேயரால் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் அப்பகுதிகளில் குடியேறி வர்த்தக முயற்சிகளில் உற்சாகத்தோடு ஈடுபடலாயினர்.

இந்த வகையில் 1815 முதல் 1900 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியை இலங்கை முஸ்லிம்களின் வர்த்தகத்துறையைப் பொறுத்தவரையில் மிகவுமே செழித்தோங்கிய ஒரு காலமாக அடையாளப்படுத்தலாம். இக்

காலப்பகுதியில் இலங்கை முஸ்லிம்களின் சுதேச வர்த்தகம் உன்னத வளர்ச்சியை அடைந்ததோடு சர்வதேச வர்த்தகத்திலும் முஸ்லிம்கள் கணிசமான பங்கினை வகித்தார்கள். "இக்காலப்பகுதியில் இலங்கைத் தமிழரும் சிங்களவரும் போராக்கள், சிந்திகள், முஸ்லிம்கள் போன்றோருடன் ஏற்றுமதி, இறக்குமதி, மொத்த வியாபாரத்தில் போட்டியிடும் அளவுக்கு பலம் பெற்றிருக்கவில்லை.[2] அந்தளவுக்கு முஸ்லிம்கள் இத்துறையில் மேலோங்கியிருந்தனர்.

முஸ்லிம்களின் இவ்வர்த்தக ஆதிக்கத்தினையும் செல்வாக்கினையும் சில சிங்கள முதலாளி வர்க்கத்தினரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. முஸ்லிம்கள் மீதான அவர்களது பகையுணர்வும் காழ்ப்புணர்வும் ஆங்காங்கே வெளிப்பட்டலானது. இப்பகையுணர்வு 1880களில் முஸ்லிம் எதிர்ப்பு மனப் பாங்காக உக்கிரமடைந்து 1900களில் சிங்கள-பௌத்த தேசியவாத எழுச்சியின் முழு வடிவினையும் பெறலாயிற்று.

இதன் காரணமாக 1880களில் சிங்கள தீவிர தேசியவாதம் வெளி நாட்டவர்களைப் பார்த்த அதே தளத்தில் வைத்தே முஸ்லிம்களையும் பார்க்கத் துவங்கியது. கிராமப்புற, நகர்ப்புறச் சிங்கள மக்களைச் சுரண்டு கின்ற அநியாயக் கும்பல்களாகவே முஸ்லிம்கள் வர்ணிக்கப்பட்டனர். கரையோர முஸ்லிம்களே இத்தீவிரவாத தேசியவாதிகளின் கவனத்தில் குவிந்தனர். இத்தகைய நெருக்கடியானதொரு சூழலிலேயே கம்பளையில் முஸ்லிம்கள் பௌத்த மத நிகழ்ச்சிகள் தொடர்பில் ஆட்சேபனை தெரி வித்தபோது கலவரம் மூழ ஆரம்பித்தது.[3]

1890கள் இலங்கையின் இனவரலாற்றில் ஒரு மோசமான காலகட்டம் எனலாம். பௌத்தமத புத்தெழுச்சியின் தந்தை என வர்ணிக்கப்படும் அனகாரிக தர்மபால (பிறப்பு 1862) 1891ல் சிங்கள மகாபோதி சபையை உருவாக்கினார். தெற்காசியாவிலேயே அன்றிருந்த ஒரேயொரு பெரும் பௌத்த நிறுவனமாக அது விளங்கியது.[4] இதனூடாக அவர் சிங்களவர்க ளின் நலன்களிலும் பௌத்தத்தின் வளர்ச்சியிலும் கரிசனை காட்டினார் எனப் போற்றப்பட்டாலும் அவரது இந்நடவடிக்கையூடாக முஸ்லிம்களுக் கெதிரான பகை முரண்பாடுகளைத் தேக்கி வளர்ப்பதில் அவர் வரிந்து கட்டிக் கொண்டு செயற்பட்டார். 1900களில் ஏற்பட்ட முஸ்லிம்-சிங்கள இனக் கலவரங்களின் பின்னணியில் தர்மபாலவின் பிரச்சார ஆயுதம்

பெரும் பங்கு வகித்தது. அனகாரிக "சிங்களவர்களை "சிங்க" இனம் எனவும் அவர்களது கலாசாரம் மட்டுமே இலங்கைக்குரியது எனவும் பிரச்சாரம் செய்தார். அவரது பௌத்த எழுச்சி பௌத்தர் அல்லாதவர்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டது"[5]

அநகாரிக தர்மபாலவும் அவரது மண்ணின் மைந்தர்களும் (Boomy Puthrayo) முஸ்லிம்களுக்கு எதிரான உணர்ச்சிகளைப் பிரச்சாரம் செய்ய முனைந்தனர். பியதாஸ சிரிசேன, E.T.D. சில்வா, ரத்னவீர, ஹரிச்சந்திர, முனிதாஸ குமாரதுங்க, எச்.டபிள்யு. அமரசூரிய போன்றோர் மண்ணின் மைந்தர்களுள் முக்கியமானவர்கள். இவர்களது பிரச்சாரக் களமாக அப் போதைய லக்மின, தினமின போன்ற சிங்களப் பத்திரிகைகள் செயற்பட்டன. இதுதவிர சில பத்திரிகையாளர்களும் பௌத்த பிக்குகளும் கூட இம் முஸ்லிம் எதிர்ப் பிரச்சாரங்களில் அநகாரிகவுடன் இணைந்து கொண்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கூறுகளில் கூர்மையடைந்த அநகாரிகவின் தேசியவாத எழுச்சி 1903 முதல் 1915ஆம் ஆண்டு காலப் பகுதியில் அதனது உச்ச கட்டத்தை அடைந்தது. சிங்கள சமூகத்தில் மது ஒழிப்பு இயக்கத்தை அநகாரிக தொடங்கியபோதும் அது ஏனைய சிறுபான்மைகளுக்கு எதிரான பிரச்சாரமாகவே அமைந்தது. இந்த மது ஒழிப்பு இயக்கம் பௌத்த கருத்தியலினால் தூண்டப்பட்டதாகும். பின்னர் அது அரசியல் மயப்பட்டு இனவாதப் பின்னணியுடன் வெளிப்படையாகவே வளர்ச்சியடையலானது.[6]

## முஸ்லிம் எதிர்ப்புப் பிரச்சாரம் 1900

இலங்கையில் சிங்கள ஆதிக்கம் நிறுவப்பட வேண்டுமென பிரச்சாரத் தூண்டுதல் அளித்தவர்களுள் அநகாரிக தர்மபால முதன்மையானவர். அவரது கடிதத் தொகுப்புகள் அடங்கிய "தர்மபால லிபி" என்ற நூலில் அவரது இனவாதச் சிந்தனைகளை நாம் அடையாளம் காணலாம். இவரது சிங்கள பௌத்த இனத்தேசியவாதக் கருத்துநிலை 1930ஆம் ஆண்டுகளுக்குப் பிந்திய பொருளாதாரத்துறையில் சிங்கள அமைச்சர்கள் எடுத்த முடிவுகளில் கூட தாக்கம் செலுத்தியது என்று ஏ.ஜே. வில்சன் அவர்கள் குறிப்பிடுகின்றார். உண்மையில் தர்மபால மேற்கொண்ட முஸ்லிம் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் வரலாற்று நீட்சியாகவே தற்போதைய

ஜாத்திக சிந்தனய, ஹெல உறுமய, சிஹல உறுமய, வீரவிதான போன்ற தீவிரவாத இயக்கங்களின் சித்தாந்தத்தளத்தை நாம் ஆராய முற்பட வேண்டும்.

அநகாரிக தர்மபாலவின் இனவாதப் பிரச்சாரம் இரண்டு பகுதிகளில் முனைப்புப் பெற்றிருந்தது. ஒன்று: ஐரோப்பிய மற்றும் இந்தியத் தமிழர் களுக்கு எதிரானது. இரண்டாவது இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரானது. "சிங்கள இனம் ஓர் இணையற்ற இனம். அவர்களது இரத்தத்தில் அடிமை இரத்தம் ஓடவில்லை. அவ்வினத்தை அழிவுக்காரர்களாலோ பிறமதத்தவர்களான தமிழர்களாலோ அடிமையாக்க முடியவில்லை. கடந்த மூன்று நூற்றாண்டுகளாக இந்நாட்டை அழித்து பௌத்த ஆலயங்களை நாசம் செய்து வாசிகசாலைகளை தீக்கிரையாக்கி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எம்மினத்தைப் பூண்டோடு ஒழிக்க முயல்பவர்கள் ஐரோப்பியர்கள். "மாமிசத்தைப் புசிக்க வேண்டும் என சபிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள்: தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள். சிங்கள நாட்டை சிங்களவர்கள் தான் ஆள வேண்டும் என அவர் எதிர்ப்புக் குரல் எழுப்பினார்.

கிறிஸ்தவர்கள் (பிரித்தானியர்கள்), இந்தியத் தமிழர்களுக்கு எதிரான இத்தகைய எதிர்ப்பலைகள் சித்தாந்தத்தளத்தில் மிகவுமே முனைப்புப் பெற்ற இதே காலப்பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிரான பகையுணர்வுகளும் குரோத மனப்பான்மையும் அடாராகவே வெளிப்படுத்தப்பட்டன. 1915ஆம் ஆண்டில் தர்மபால முஸ்லிம் எதிர்ப்புக் குரலை இப்படி வெளிப்படுத்தினார். "அந்நியரான முஹம்மதியர் சைலொக்கிய வழிமுறைகளால் யூதர்களைப் போன்று செல்வந்தர்களாக மாறினர். 2358 வருடங்களாக அந்நிய முற்றுகையிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காக இரத்தத்தை ஆறு போல் ஓட்டி மூதாதையரைக் கொன்ற மண்ணின் மைந்தர்களான சிங் களவர்கள் பிரித்தானியர்களின் கண்களில் நாடோடிகளாகவே தென்படுகின்ற னர். தென்னிந்திய முஹம்மதியர்கள் இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் எந்த அனுபவமும் அற்ற கிராமவாசிகளைச் சுரண்டுகின்றார்கள். இதன் விளைவு முஹம்மதியர் முன்னேறுகின்றார்கள். மண்ணின் மைந்தர்கள் பின்னடைகின்றார்கள்."

இனவாதப் பிரச்சாரத்தில் சில சிங்களப் பத்திரிகைகளும் எழுத்தாளர்களும் இணைந்து கொண்டனர். 1906ல் டொன்டேவிட் ஹேவாவிதாரன "சிங்கள பௌத்தய" என்ற பத்திரிகையைத் தொடங்கி இப்பிரச்சாரத்தில் பங்கெடுத்

தார். இதுபோன்று பியதாஸ சிறிசேன என்று தனது பெயரை மாற்றிக் கொண்ட பெற்றிக் டி சில்வா 1903ல் "சிங்கள ஜாதிய" என்ற பத்திரி கையில் "சிங்கள தேசத்தை": நவீன அறிவைப் பெற்ற சிங்கள இனமாக தம்முடைய தாழ்வு மனப்பான்மையை ஒதுக்கி ஒரு பலம் வாய்ந்த தேச மாக மாற்றுவதே இப்பத்திரிகையின் நோக்கம்" என எழுதினார். பியதாஸ, முனிதாஸ, தர்மபால ஆகியோரின் இவ்வகை எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ரட, ஜாதிய, ஆகம (நாடு, இனம், மதம்) என்ற முக்கோஷங்கள் உரத்து ஒலித்தன. "கரையோர முஸ்லிம்களிடமும் கொச்சிக்காரர்களிடமும் அந்நியர்களிடமும் கொடுக்கல் வாங்கல் வைத்திருக்க வேண்டாம்" என பியதாஸ மிகப் பகிரங்கமாகவே சிங்கள மக்களைக் கேட்டுக் கொண்டார். சிங்களத் தினசரியான லக்பிம "வெறுக்கத் தக்க இக்கும்பலை வெளியேற்றுவ தற்குத் தகுந்த திட்டம் தீட்டப்பட வேண்டும்" எனவும் தினமினப் பத் திரிகை முஸ்லிம்கள் இன்று வேரூன்றிய எம் பகைவர்கள்" எனவும் மிக வெளிப்படையாகவே தமது பகையுணர்வினை வெளிப்படுத்தலானது.

இவ்வாறு பௌத்த சிங்களத் தேசியவாத எழுச்சியின் மூலகர்த்தாக்கள் முடுக்கிவிட்ட பிரச்சாரம் அதனது விளைவுகளை 1915ல் இடம்பெற்ற சிங்கள-முஸ்லிம் கலவரத்தில் மிகத் தெளிவாகவே வெளிப்படுத்தி நின் றது. அநகாரிக போன்றோரது இனவாத உணர்வுகளால் வெறியூட்டப்பட்டி ருந்த நடுத்தர வர்க்க சிங்கள இளைஞர்கள் முஸ்லிம்களுக்கெதிரான தமது பகையுணர்வை இக்கலவரத்தில் கொட்டித் தீர்த்தனர். கலவரத்திற்கு உடனடிக் காரணங்கள் வேறு இருப்பினும் உண்மையில் கலவரத்திற்கான சித்தாந்த அடித்தளத்தை தேசியவாதிகளின் பிரச்சாரங்களே இட்டிருந்தன என்பது மிகத் தெளிவானது. இக்கலவரத்தினால் மிக நீண்டகாலமாகவே சுமுகமாக நிலவி வந்த சிங்கள-முஸ்லிம் உறவில் பெரும் பாதிப்பு ஏற் படலானது. முஸ்லிம்கள் இதில் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டனர். கராவ சாதியைச் சேர்ந்த சிங்களவர்கள் மீன்வெட்டுவது போன்று முஸ் லிம்களை வெட்டினார்கள். ஏராளமான வர்த்தக நிறுவனங்கள் முற்றாகவே நாசமாக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற முதலாவது பெரிய இனக் கலவரம் என இதனைத் துணி ந்து கூறலாம். இதில் பௌத்த இனத்தேசியவாதக் கருத்துநிலை (Ethnic Nationalist Ideology) பாரியளவு பங்களித்தது என்பதை வரலாற்றை நுணுகி நோக்குகையில் புரிந்து கொள்ளலாம்.

## 1948 இற்குப் பின்னர்

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இலங்கையின் அரசியல் வரலாற்றை நோக்குகின்ற போது அது இனத்துவ அரசியலாகவே (Ethnic Politics) இருந்து வருகின்றது. இன்னொரு வகையில் கூறுவதாயின் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் வரலாறு பேரினவாத அரசியல் வரலாறாகவே அமைந்துவிட்டது. இத்தகைய இனத்துவ அரசியலுக்கு இலங்கையின் பெரும்பான்மைக் கட்சிகள் மாறி மாறி தமது தலைமைத்துவத்தை அளித்து வந்துள்ளன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

1948ல் இலங்கையின் முதற் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட டீ.எஸ். சேனநாயக்காவின் சிங்கள ஆதிக்க மனோநிலையும் அதை நிறுவுவதற்கான குடியேற்றத்திட்டங்களும் இக்கருத்தை உறுதிப்படுத்துகின்றன. 1970ல் ஆட்சி பீடமேறிய இலங்கை சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பவற்றின் கூட்டு அரசாங்கம் கொண்டு வந்த அரசியல் யாப்பே இன்றைய இனப்பிரச்சினைக்குக் காரணமாகியது.

சிறுபான்மை தொடர்பில் பேரினவாத ஆட்சியாளர்கள் புறக்கணிப்பு மனோநிலையோடு பௌத்த தேசியவாதத்தை நிலைநாட்டுவதிலேயே முனைப்பாக இருந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் முஸ்லிம்களின் பொருளாதாரத்தைக் குறிவைப் பதாக மட்டுமன்றி அவர்களின் சமூக இருப்பையே பல போது கேள் விக்குறியாக்கியது. 1970களில் பாணந்துறை, காலி, மஹியங்கனை, புத்தளம், களுத்துறை போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட பேரினவாதத் தாக்குதல்கள் பல முஸ்லிம்கள் கொல்லப்படவும் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான உடமைகள் நாசமாக்கப்படவும் காரணமாய் அமைந்தன. ஆனாலும் பேரினவாத அரசாங்கம் குற்றவாளிகளைத் தண்டிப்பது தொடர்பில் எவ்வித ஆக்க பூர்வமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. 1976ல் புத்தளப் பள்ளிவாசலில் ஏழு பேர் சிங்களப் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப் பட்டபோது அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அச்சம்ப வம் குறித்து வெளியிட்ட அறிக்கை பேரினவாதத்திற்கும் வன்முறைக்கும் சார்பானதாகவே இருந்ததனால் பலத்த கண்டனத்துக்கு உட்பட்டது. இதைப் பாராளுமன்றத்தில் எடுத்துப்பேச முடியாதளவுக்கு முஸ்லிம்

பிரதிநிதிகள் அரசாங்கத்தின் பொம்மைகளாக வாய்பொத்தி மௌனம் காத்த போது எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் இதற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு அரசாங்கத்தை வேண்டினார்.[8]

1974ல் மஹியங்கணையில் பங்கரகம்மனை எனும் முஸ்லிம் கிராமத்தில் முஸ்லிம் கடைகள், பள்ளிவாயல்கள், வீடுகள் எரிக்கப்பட்டன. இது தொடர்பிலும் அரசாங்கம் மௌனமே சாதித்தது. இலங்கை இனத்துவ அரசியலில் பேரினவாத அரசியல் கட்சிகள் பௌத்த கருத்து நிலைகளுக்கு சார்பாக இயங்கிய அதேவேளை இனவாதத்தையே மூலதனமாக வைத்து அரசியல் லாபம் பெறும் நோக்கிலமைந்த கட்சிகளும் பௌத்த தீவிரவாத இயக்கங்களும் வரலாற்றின் எல்லாக் காலகட்டங்களிலும் தோன்றி வளர்ந்தன. 50களிலும் 60களிலும் சிங்கள இனவாதப் பாசிசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திகள் தோற்றம் எடுத்தன. எப்.ஆர். ஜயசூரிய, ஆர்.ஜீ. சேனநாயக்க, கே.எம்.பீ. இராஜரத்ன போன்றோரின் தலைமையில் இய்ங்கிய "ஜாதிக விமுக்தி பெரமுன", "சிங்கள பாஷா பெரமுன" என்பன எமது வாதத்திற்குத் தகுந்த உதாரணங்களாகும். 70களில் ஜே.ஆர். ஜயவர்த்தன, மெதியூவ் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பௌத்த பாசிச உணர்வலைகளை நிறுவனமயப்படுத்தாவிடினும் அவற்றிற்கு அரசியல் ரீதியாக ஆதரவளித்து வந்தனர். "நீங்கள் சண்டையிடத் தயார் எனில் நாங்களும் சண்டையிடத் தயார். போர் என்றால் போர்: சமாதானம் என்றால் சமாதானம்" (If it is war the war, If it is Peace the Peace) என 1977இல் ஜே.ஆர். பாராளுமன்றத்தில் தமிழர்களுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தார்.

இலங்கையின் இருபெரும் கட்சிகளின் அரசியல் வேலைத்திட்டங்கள் முஸ்லிம்களை ஒடுக்குவதாகவும் அவர்களது உரிமைகளை மறுப்பதாகவும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்த பிரதேசங்களில் அவர்களின் சனச்செறிவைக் குறைத்து அரசியல் பலத்தை இல்லாதொழிக்க சட்டவிரோதக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. டீஎஸ். முதல் ஜே.ஆர். வரை இதனை முன்னெடுத்துச் சென்றனர். இதுபோன்று ஜே.ஆரினால் கொண்டுவரப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறை காரணமாக வடகிழக்கிற்கு வெளியே வாழும் 60 வீதமான முஸ்லிம்களின் அரசியல் பலமும் உரிமைகளும் கேள்விக்குள்ளாகியது.

1980களிலும் இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளும் தாக்குதல்களும் பேரினவாதிகளால் மிகப் பகிரங்கமாகவே நிகழ்த்தப்பட்டன. 1980 ஜனவரியில் கொம்பனித்தெருப் பள்ளிவாயலில் ஒரு முஸ்லிம் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். 1982ல் காலி துவவத்தை கிராம முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டதோடு நகரத்தில் இருந்த முஸ்லிம் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. 1983 ஜூலைக் கலவரத்தில் பத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1990களில் இலங்கை முஸ்லிம்கள் மீதான பேரினவாத வன்முறைகள் ஓரளவு உக்கிரமடைந்ததோடு அதற்கான அரச ஆதரவும் வலுப்பெற்றது. முஸ்லிம்கள் மீது அதிக எண்ணிக்கையிலான தாக்குதல்கள் இடம்பெற்ற ஒரு தசாப்தமாக நாம் இதனை அடையாளப்படுத்தலாம். இத்தாக்குதல்கள் தீவு மட்டத்தில் பரவலாக இடம்பெற்றமையும் இன்னொரு முக்கிய அம்சமாகும்.

பேருவளை சிங்கள-முஸ்லிம் கலவரம், திக்வெல்லைச் சம்பவம், தீகவாபி பொன்னன்வெளி வன்முறைகள், பன்னல எலபடகம தீ வைப்புச் சம்பவங்கள், ஹிரிப்பிட்டிய பள்ளிவாயல் எரிப்பு, அளுத்கமை இனப்பகைமை, அம்பாறை நகர முஸ்லிம்கள் மீதான பகை உணர்வுகள், கலகெதர மோதல், வட்டதெனிய கைகலப்பு, திஹாரிய இனமுறுகல் என 1990கள் அநேக சிங்கள-முஸ்லிம் இனமுரண்பாடுகளைச் சந்தித்தன. இவற்றால் முஸ்லிம்களின் கோடிக்கணக்கான சொத்துக்களும் செல்வங்களும் நிர்மூலமாக்கப்பட்டன. பல முஸ்லிம்கள் தாக்கப்பட்டார்கள். எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல் இரண்டாயிரமாம் ஆண்டில் மாவனல்லையில் இடம்பெற்ற சிங்களப் பாஸிசத்தின் தாக்குதல் அமைந்தது. 35கோடிக்கு மேல் நஷ்டத்தை ஏற்படுத்திய அவ்வன்முறையில் குமாரதுங்க அரசாங்கம் முஸ்லிம்களின் காதில் பூச்செருகிவிட்டு தனது பொறுப்பிலிருந்து லாவகமாக நழுவிப் போய்விட்டது.

## 1990களிற்குப் பின்னரான சிங்கள இனவாத எழுச்சி அலைகளும் அதன் சமூக அரசியல் பரிமாணங்களும்

90களை முன்னெப்போதும் இல்லாத அளவு சிங்கள இனவாதம் நிறுவனமயப்பட்ட ஒரு காலப்பிரிவாக அடையாளம் காணலாம். 60களிலும் 70களிலும் உருவான இனவாத சக்திகள் நீண்டகாலம் நிலைத்து நிற்க

முடியாமல் போனமைக்கான காரணம் அவை நிறுவனமயப்பட்டு இருக்க வில்லை என்பதே. ஆனால் 1993ல் தமிழர்களுக்கு எதிராக முனைப்புப்பெற்ற சிங்கள இனவாத சக்திகள் நன்கு நிறுவனமயப்பட்ட வலைப்பின்னலாக இயங்க ஆரம்பித்து முஸ்லிம்களுக்கு எதிராகவும் செயற்பட முனைந்தன. இதன் பிரத்தியட்சமான வெளிப்பாடுகளில் ஒன்றே 1997இல் உருவாக்கப்பட்ட சிங்கள ஆணைக்குழுவாகும்.

சுமார் 40 சிங்கள பௌத்த இயக்கங்கள் ஒன்றுசேர்ந்து பௌத்த இனத்தைப் பாதுகாத்தல் என்ற நோக்கில் உருவாக்கப்பட்ட இதற்கு மக்கள் ஐக்கிய முன்னணி, சிங்கள பூமி புத்திரய போன்ற இனவாதக் கட்சிகள் உட்பட இலங்கையின் பெரும்பான்மைக் கட்சிகள் கூட ஆதரவளித்தன. பேராதெனிய, கொழும்பு, களனி, ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சிங்களக் கல்விமான்களும் பௌத்த பிக்குகளும் இவ்வாணைக்குழு முன் சாட்சியமளித்தனர். ஆணைக்குழு முன் சாட்சியமளித்த இவர்கள் இலங்கையில் பௌத்தர்களுக்கு அநியாயம் இழைக்கப்படுவதாகவும் சிங்கள இனம் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்குவதாகவும் குரலெழுப்பினர்.

பூமி புத்திரய கட்சியின் தலைவர் ஹரிச்சந்திர விஜேதுங்க "இலங்கையின் பெரும்பாலான வர்த்தகம் முஸ்லிம்களிடமே இருக்கின்றது. 80 சதவீதமானவை முஸ்லிம்களின் ஆதிக்கத்திலேயே உள்ளது. இலங்கையில் இஸ்லாமிய அரசாங்கமொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகள் திஹாரி போன்ற இடங்களில் காணிகளை வாங்கியுள்ளனர். புத்தளத்தில் முஸ்லிம்களின் குடியேற்றம் அதிகரித்து வருகின்றது. அக்குரணை நகரினூடாக சிங்களவர்களின் பூத உடலைக் கொண்டு செல்வது கூட அனுமதிக்கப்படுவதில்லை. கிரிந்திவலை, நிட்டம்புவ நகரங்களில் முஸ்லிம்களின் கடைகள் அதிகரித்து வருகின்றன. 1976ல் மீரிகமையில் ஒரேயொரு முஸ்லிம் கடையே இருந்தது. தற்போது 56 கடைகள் இருக்கின்றன (திவயின 07.04.97) எனச் சாட்சியமளித்தார்.

பேராசிரியர் அபேசூரிய: "வடக்கில் நடைபெறும் யுத்தத்தில் நாட்டைப் பாதுகாக்க முஸ்லிம்கள் பங்களிப்பதில்லை. எனவே, இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு ஒரு அங்குலமேனும் உரிமையில்லை" (திவயின 15.07.97) கலாநிதி தார மிடிபொல ரத்ன சார தேரர் "பௌத்த விகாரைகளுக்குச் சொந்தமான காணிகள் முஸ்லிம்களுக்கு விற்கப்படக்கூடாது என வேண்டிக் கொண்டார். (திவயின 27.07.97)

சிங்கள வீரவிதான சங்கமய செயலாளர் ஏ.டீ. சுனில் சாந்த கருத்து வெளியிடுகையில் "நாட்டின் பொருளாதாரம் முஸ்லிம்களிடமே உள்ளது. ஓர் இஸ்லாமிய இயக்கம் காணிகளைக் கொள்வனவு செய்வதில் ஈடு பட்டுள்ளது. புத்தளத்தில் அண்மையில் இடம்பெற்ற இஸ்லாமிய மாநாட்டைத் தொடர்ந்து அப்பிரதேசங்களில் சிங்களவர்களுக்குச் சொந்தமான காணிகளை முஸ்லிம்கள் விலைக்கு வாங்கத் தொடங்கியிருக்கின்றனர். சிங்கள யுவதிகளை முஸ்லிம் இளைஞர்கள் மானபங்கப்படுத்துகின்றனர் எனக் குற்றம் சாட்டினார். (லங்காதீப 06.06.97)

இவ்வாணைக்குழுவின் முதலாவது சுற்றறிக்கை 1997 செப். 17இல் வெளியிடப்பட்டது. இலங்கையின் இனவாத வரலாற்றில் சிங்கள ஆணைக் குழு ஒரு முக்கியமான நிறுவனமாகும். சிங்கள சமூகத்திலுள்ள எல்லா தரப்பினரையும் இணைத்த ஒரு வலைப்பின்னலை அது ஏற்படுத்தியுள்ளது. அதன் வெளிப்படையான இனவாத சக்திகளாக வீரவிதான, பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பு என்பவை இப்போது முஸ்லிம்களுக்கெதிராக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

**அடிக் குறிப்புகளும் உசாத்துணைகளும்**

1. கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி - மாத்தறை மாவட்ட முஸ்லிம்கள், பக்கம் 34, கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், இலங்கை.
2. கலாநிதி குமாரி ஜயவர்த்தன, இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள், பக், 17.
3. Edt. by. Michael Roberts, Collective Identities Nationalisms and Protest in Modern Sri Lanka.
4. Past Times, A Special Issue Published by, Sunday Times, Page 16, 1998.
5. Nira Wickramasinghe, Ethnic Politics in Colonial Sri Lanka, Page. 35.
6. Ibid, Page 65.
7. கலாநிதி குமாரி ஜயவர்த்தன, இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள், பக். 28.
8. A. Jeyaratnam Wilson, S.J.V. Chelvanayakam and the Crisis of Sri Lankan Tamil Nationalism, 1947-1977, Page 112.

உசாத்துணைகள்

1. முஹம்மது சமீம், ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்.
2. The 1915 Riots in Ceylon, A Symposium, Journal of Asian Studies, Volu. xxix.
3. H.A.G. Hulugalla, British Government of Ceylon, (Colombo 1963)
4. Dr. Ameer Ali, The Muslim Factor in Ethnic Crisis of Sri Lanka.
5. Sri Lanka 50 years of Independence, A Ravaya Publication, 1998.



# கம்பளைக் கலவரம் 1915

01

## இருபதாம் நூற்றாண்டின் முதற்பெரும் இனமோதல்

இலங்கையின் இன நெருக்கடி வரலாற்றில் ஏற்பட்ட முதற் பெரும் கலவரமாக கம்பளை முஸ்லிம்-சிங்கள மோதலைக் கொள்ளலாம். இதனை சிங்கள-முஸ்லிம் இனமோதல் என்பதை விட சிறுபான்மை மக்கள் திரள் ஒன்றின் மீது பெரும்பான்மை இனவாதப் பாசிஸம் கட்டவிழ்த்துவிட்ட ஆதிக்க அடக்குமுறை எனக் கொள்வதே பொருத்தம்.

பௌத்தர்களின் பெரஹர ஊர்வலம் கம்பளைப் பள்ளிவாயல் முன்னால் செல்வதை முஸ்லிம்கள் தடுக்க முயன்றபோதே இம் மோதல் ஏற்பட்டது என்று கூறப்படும் உடனடிக் காரணத்துக்கு அப்பால் சென்று இதற்கான பின்னணியை ஆராய்வோமானால் இவ்வாறானதொரு கலவரத்துக்கான சித்தாந்த அடித்தளங்கள் 1880 களிலிருந்தே கட்டமைக்கப்பட்டு வந்தன என்பதைப் புரிந்து கொள்ளலாம். குறிப்பாக முஸ்லிம்களுக்கு வணிகத்திலிருந்த செல்வாக்கினாலும் ஆதிக்கத்தினாலும் ஆத்திரமடைந்திருந்த சிங்கள இனவாத சக்திகளின் காழ்ப்புணர்வு இக்கலவரத்தினூடே தெளிவாகவே வெளிப்பட்டதோடு முஸ்லிம்களுக்கு பெரும் அழிவையும் கொண்டு வந்தது.

1900களில் பெரும்பாலான வணிகத்துறை நடவடிக்கைகளில் முஸ்லிம்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. இதனால் இவற்றுக்குப் போட்டியாக வளர்ந்திருந்த சிங்கள மத்தியதர வர்க்கத்தின் போட்டியானது சிங்கள மக்களுக்கும் முஸ்லிமக ளுக்குமிடையே பெருத்த விரோத மனப்பான்மையை வளர்த்திருந்தது.[1] அனகாரிக தர்மபால போன்ற பௌத்த தேசியவாதிகளும் தீவிர சிங்கள வலதுசாரிப் பத்திரிகை களும் இத்தகைய விரோத மனப்பான்மையை சிங்களவர்களுக்கு மத்தியில் தேக்கி வளர்ப்பதில் முக்கிய பங்கெடுத்தனர். முஸ்லிம் வணிகர்களுக்கு இடப்பட்ட "அந்நிய நாட்டு வர்த்தகர்கள்" என்ற அடைப்புக்குறிகளும் "இவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும்" என்ற தேசபக்த இயக்கவாதிகளின் எதிர்ப்புக் குரல்களும் இனத்தேசியவாதத்தை **(Ethnic nationalism)** வளர்ப்பதற்கு நன்கு தூபமிட்டிருந்தன.

இவ்வகையில் இனவாத உணர்வுகளால் வெறியூட்டப்பட்டிருந்த நடுத்தர வர்க்க சிங்கள இளைஞர்களுக்கும் வன்முறையாளர்களுக்கும் 1915ம் ஆண்டுக் கலவரம் வாய்ப்பானதொரு சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது. இன்னொரு புறம் இத்தகை யதொரு கொதிப்பான சூழ்நிலையில் முதலாம் உலகப்போர் ஆரம்பித்து அத்திய வசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும் விலையேற்றமும் எங்கும் பரவி இருந்தது. சர்வதேச அளவில் ஏற்பட்ட இந்நெருக்கடி நிலை துரதிஷ்டவசமாக இலங்கையை யும் பாதித்தது. இதனால் பெரும்பான்மை மக்களிடையே வறுமையும் பற்றாக்குறை யும் ஏற்பட்டதோடு வர்த்தகர்கள் போர்க்கால நெருக்கடிகளைப் பயன்படுத்தி பெரு மளவில் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர் என்ற மனோபாவத்தையும் பெரும் பான்மை மக்களிடையே உண்டுபண்ணியது.[2]

அழுத்தம் நிறைந்த இத்தகைய போர்க்காலச் சூழ்நிலையில் சிங்கள மக்கள் குறிப்பாக நடுத்தர வர்க்க இளைஞர்கள் அமைதி இழக்கத் தொடங்கினர். சிங்கள வணிகர்களோ இவ்வமைதியின்மையை நன்கு பயன்படுத்தி அதனை முஸ்லிம் களுக்கு எதிரான காழ்ப்புணர்வாகவும் பகையுணர்வாகவும் தூண்டிவிட்டனர். "சிங்கள மக்களை ஏமாற்றிச் சுரண்டும் பேர்வழிகளாக முஸ்லிம்கள் வர்ணிக்கப் பட்டனர். இப்பகையுணர்வும் விரோத மனப்பாங்கும் அதன் உச்சளவில் இனமோத லாக வெடித்தது. உண்மையில் 1915ம் ஆண்டு கலவரத்துக்கான நீண்டகாலக் கார ணம் இந்த வரலாற்றுப் பின்னணியே என்பதை 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் நிலவிய வணிக நிலைச் செல்வாக்கினை ஆராய்கின்ற போது புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் இக்கலவரம் இடம்பெறுவதற்கு முன்னர் இரு இனங்க ளுக்கிடையேயும் சிறியளவிலான மோதல்கள் ஆங்காங்கே நடைபெற்று வந்தன. ஆனால் அவை முஸ்லிம்களின் கவனத்தை அவ்வளவு தூரம் ஈர்க்கவில்லை.

முஸ்லிம்கள் சிங்கள மக்களோடு சமாதானமாகவும் அமைதியாகவும் வாழவே முயற்சித்து வந்தார்கள். ஆனால் 1915ம் ஆண்டைய நிகழ்வு முஸ்லிம்களுக்கிடையே எதிர்பாராத பதற்றத்தையும் சிங்கள மக்கள் மீதான நம்பிக்கையீனத்தையும் ஏற் படுத்தும் அளவுக்கு கொடூரமாகவே இருந்தது.[3]

## கலவரத்துக்கான உடனடிக் காரணம்

1914ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கம்பளை நகரில் பௌத்தர்கள் தமது எசல பெரஹர நிகழ்வைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சிங்களவர்களின் இப்பெரஹர ஊர்வலம் தாங்கள் புதிதாக நிர்மாணித் துள்ள பள்ளிவாசலுக்கு முன்னால் கடந்து செல்கின்றபோது அமைதியாகக் கடந்து செல்ல வேண்டும் என முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்தனர். பெரஹர ஊர்வலத்தில் இடம்பெறும் பெரிகை கொட்டுதல், ஊதுகுழல் வாசித்தல், ஆரவாரம் செய்தல் போன்றன பள்ளிவாசலைக் கடந்து செல்லும்போது தவிர்க்கப்பட வேண்டும் என முஸ்லிம்கள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இலங்கையை பிரித்தானியர் ஆண்டபோது அரசாங்க அதிபரே மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றுவது வழக்கம். 1914ம் ஆண்டு கண்டி மாவட்ட அரசாங்க அதிபராக இருந்தவர் ஓர் ஆங்கிலேயராவார். முஸ்லிம்களின் முறைப்பாட்டுக்குச் செவிமடுத்த அவர் கம்பளை பள்ளிவாயல் எல்லையிலிருந்து 100மீற்றர் தூரத்தில் அடையாளக் கம்பங்களை இடுமாறு பொலிஸாரைப் பணித்த தோடு இக்குறிப்பிட்ட எல்லையினை ஊர்வலம் கடந்து செல்கையில் வாத்தியக் கருவிகளையும் பெரிகைகளையும் இசைப்பதைத் தவிர்க்குமாறு பௌத்த விகாரைத் தலைவராக இருந்த பஸ்நாயக நிலமேவுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இப்பணிப்புரையினால் கண்டி பௌத்த விகார சபை ஆத்திரமடைந்தது. அது அரசாங்க அதிபரின் கட்டளைக்கு எதிராக கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. 1815இல் பிரித்தானிய அரசுக்கும் கண்டி இராச்சியத்திற்குமிடையில் இடம்பெற்ற கண்டிய உடன்படிக்கையின் 5வது ஷரத்தை ஆங்கிலேயப் பொலிஸ் பொறுப்பதிகாரி மீறுவதாக அவர்கள் குற்றம் சாட்டினர். "கண்டி மாகாணத்தின் குடிமக்களாலும் தலைவர்களாலும் மதிக்கப்படுகின்ற பௌத்த மதம் மற்றும் அதன் உரிமைகள் மீறப்படக்கூடாது அதனது வழிபாட்டுத்தலங்கள் பிரித்தானிய அரசினால் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்."[4] என்பதே அந்த ஐந்தாவது ஷரத் தாகும்.

பன்சாலை தர்மகர்த்தாக்களின் முறைப்பாட்டுக்கு ஏற்ப விகாராதிபதிகளின் சாட்சியங்களைப் பதிவுசெய்த அப்போதைய மாவட்ட நீதிபதி பௌல்பீரிஸ்

என்பவர் பெரஹர யானைகளுடனும் ஏனைய வாத்தியக் கருவிகளுடனும் கம்பளை பள்ளிவாசலுக்கு முன்னால் குறிப்பாக பள்ளிவாயல் அமைந்துள்ள அபகமுவ வீதிவழியே சுதந்திரமாகச் செல்ல முடியும் எனவும் வாத்தியக்கருவிகள் இசைக்க முடியும் எனவும் ஏற்கனவே அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட தீர்ப்பு கண்டிய உடன்படிக்கையை மீறும் செயல் எனவும் பகிரங்க அறிவித்தல் விடுத்தார். எனினும் மாவட்ட நீதிமன்றத்தின் இத்தீர்ப்புக் குறித்து அதிருப்தியுற்ற அரசாங்க அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அதற்கெதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். இவ்வழக்கு சட்டமாஅதிபர் ஜே. சோவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு தீர்ப்பு வழங்கப்படவிருந்த வேளை குருணாகல் கண்டி வீதியில் விரும்பத் தகாத சம்பவமொன்று நிகழ்ந்தது.

1915 ஜனவரி 27ம் திகதி கண்டி குருணாகல் வீதியில் குருணாகல் நகரிலிருந்து சில மைல் தொலைவில் அமைந்திருந்த பௌத்த விகாரை ஒன்றிலிருந்து ஊர்வலம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. இப்பௌத்த ஊர்வலம் தெல்லியகமுவ எனும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிராமத்தைக் கடந்து சென்ற போது சில முஸ்லிம்களால் குழப்ப முயற்சிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. அப்போது இலங்கையில் வெளிவந்து கொண்டிருந்த Ceylonese எனும் ஆங்கிலப் பத்திரிகையின் 1915 பெப்ரவரி 2ம் திகதி இதழில் இச்சம்பவம் பற்றிய செய்தி பிரசுரமாகியிருந்தது. இச்சம்பவம் தொடர்பில் குருணாகல் பொலிஸாரின் பிடியாணை யின் பெயரில் 14 முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். ஊர்வலத்தைக் குழப்பியவர்கள் என்றும் கலவரத்தைத் தூண்ட முயற்சித்தவர்கள் என்றும் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதே தினத்தில் தான் உயர்நீதிமன்றம் கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிரான தனது இறுதித் தீர்மானத்தை வெளியிட்டது. அதாவது 1805ம் ஆண்டின் பொலிஸ் கட்டளைச்சட்டப் பிரமாணங்களுக்கும் 1896ம் ஆண்டின் உள்ளூர் சபை கட்டளைச் சட்டப் பிரமாணங்களுக்குமேற்பவே எசல பெரஹர ஊர்வலம் நடாத்தப் பட வேண்டும் என உயர் நீதிமன்றம் ஆணையிட்டது. (இவ்விரு சட்டப் பிரமாணங் களும் வீதி ஊர்வலம், பெரிகை, ஊதுகுழல் வாசித்தல் என்பவற்றோடு தொடர்பு பட்டதாகும். அவற்றைப் பயன்படுத்துகையில் பின்பற்ற வேண்டிய மட்டுப்பாடு களை விளக்குபவை) மாவட்ட நீதிமன்றத்தில் பௌத்த விகாரைக்குச் சார்பாக அளிக்கப்பட்ட தீர்ப்பை உயர் நீதிமன்றம் மாற்றியமைத்ததால் விகாராதிபதிகள் ஆவேசமும் ஆத்திரமும் கொண்டனர். இத்தகைய உணர்ச்சிக் கொந்தழிப்புமிக்க ஒரு சூழலிலேயே 1915 மே 28க்கான வெசக் பண்டிகையும் நெருங்கிக் கொண்டி ருந்தது.

## கலவரத்தின் ஆரம்பம்

1915 மே 28இல் முஸ்லிம் கோஷ்டி ஒன்றுக்கும் சில சிங்கள இளைஞர்களுக் குமிடையில் கண்டி காசல் வீதியில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பின்னர் கைகலப்பில் முடிந்தது. தலதா மாளிகையை முஸ்லிம்கள் தாக்கப் போகின்றார்கள் என்று பரவிய வதந்தியைத் தொடர்ந்தே இக்கைகலப்பு ஏற்பட்டது. சில இனவாத சக்திகள் திட்ட மிட்டுப் பரப்பிய இவ்வதந்தி நாட்டின் பல பாகங்களுக்கும் காட்டுத்தீ போல் பர வியது. சிங்கள இளைஞர்களிடையே ஆவேசத்தையும் உணர்ச்சிக் கொந்தளிப் பையும் ஏற்படுத்தியது. உள்நாட்டுக் கிராமப் புறங்களில் மட்டுமன்றி கொழும்பு கண்டி வீதியில் அமைந்திருந்த நகரங்களிலும் பெரும் பதற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. 25 மே 1915 காலையில் கண்டியைச் சூழ்ந்திருந்த அநேக சிங்களக் கிராமவாசிகள் வீதிக்கிறங்கி தலதா மாளிகையைப் பாதுகாக்கவென அதனைப் புடைசூழ்ந்து நின்றனர். இதற்கிடையில் கண்டியில் முஸ்லிம்கள் மேற்கொள்ள விருக்கின்ற தாக்குதலுக்குப் பக்கபலமாக கொழும்பிலிருந்தும் முஸ்லிம்கள் சாரி சாரியாக வந்து கொண்டிருப்பதாக பரவிய இன்னொரு வதந்தி பதற்றத்தை மேலும் அதிகரித்தது.

அப்போது கண்டி பொலிஸ் பொதுப் பரிசோதகராக இருந்த H.L. Dowbiggin பஞ்சாப் படைகளின் உதவியுடன் பள்ளிவாயலுக்கு வெளிப்பகுதியில் நிலவிய பதற்ற நிலையைக் கட்டுப்படுத்த முயன்றார். அவரது இம்முயற்சி தலதா மாளி கையை முஸ்லிம்கள் தாக்கவே முயல்கிறாகள் என்ற வதந்தியை உண்மைப்படுத்து வது போல் அமைந்துவிட்டது. சிங்கள மக்கள் அநேகமானோர் கொல்லப்பட்டுவதாக வும் சிங்களப் பெண்கள் முஸ்லிம் இளைஞர்களால் மானபங்கப்படுத்தப் படுவதாக வும் ஆதாரமற்ற மற்றொரு வதந்தி நாடளாவிய ரீதியில் மிக வேகமாகப் பரவியது. இது கலவரத்தை மேலும் உக்கிரமாக்கக் காரணமாய் அமைந்தது. இதன் விளைவாக சிங்கள இளைஞர்களும் இனவாத சக்திகளும் முஸ்லிம்களைக் கண்ட இடங்களி லெல்லாம் தாக்கத் தொடங்கினர். வியாபார நிலையங்களுக்குத் தீயிட்டுக் கொளுத்தி னர். கண்டியில் ஆரம்பித்த இவ்வன்முறைகள் வடக்குக் கிழக்கைத் தவிர நாட்டின் ஏனைய எல்லா மாகாணங்களுக்கும் பரவியது. கண்டி கொழும்பு வீதியில் இருந்த முஸ்லிம் கிராமங்களிலும் தென் மாகாணத்தில் காலி, மாத்தறை முஸ்லிம் கிராமங் களிலும் வடமேற்கில் குருணாகலையிலும் சப்ரகமுவவில் இரத்தினபுரி, பலாங் கொடை என்பவற்றிலும் முஸ்லிம்களுக்குப் பெருத்த சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1915ல் கடல் பிரயாணங்களின் ஊடாக இலங்கையைத் தரிசித்த Victor Heiscer என்னும் அமெரிக்கப் பிரயாணி இக்கலவரத்தின் உக்கிரத்தைப் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

**1915 கலவரத்தில் பாதிக்கப்பட்டு இராணுவச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பிரதேசங்கள்**



"கண்டி நகரப்பாதைகளில் வாகனங்கள் செல்வதைக் கலவரத்தில் ஈடுபட்ட சிங்களவர்கள் தடுத்தார்கள். மணலால் நிரப்பப்பட்ட சோடா போத்தல்களும் கூரான கத்திகளும் உடைந்த கண்ணாடிக் கூர்முனைகளும் கலகக்காரர்களால் பயன்படுத்தப் பட்டன. அன்று (1915 மே 25) துறைமுகங்களில் கப்பல்கள் நகரவில்லை. ஒவ்வொரு பிரதேசத்திலும் மக்கள் கூட்டம் கூட்டமாக குழுமியிருந்தனர்."[5] இக்கலவரம் நாடு தழுவிய வகையில் நடந்தேறியது. முஸ்லிம்களின் வசிப்பிடங்கள், வர்த்தக நிலையங்கள் கொழுத்தப்பட்டன. பள்ளிவாயல்கள் பலமாக தாக்கப்பட்டு சேதப்படுத் தப்பட்டன. சில பள்ளிவாயல்கள் முற்றாகவே இடித்துத் தள்ளப்பட்டன. கராவ சாதியைச் சேர்ந்த சிங்களவர்கள் முஸ்லிம்களை மீன் வெட்டுவது போல் வெட்டித் தள்ளினார்கள் என்று இங்கிலாந்துக்கு அனுப்பிய தனது அறிக்கையில் ஆங்கிலேயத் தேசாதிபதி குறிப்பிட்டிருந்தார். இதில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருந்த பொருள் சேதம் அந்நாளைய பெருமதியில் 155 இலட்சம் ரூபாவாக மதிப்பிடப்பட்டது. இலங்கைப் பொலிஸாரினால் சிங்களவர்களின் மூர்க்கத்தனமான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முடியாமல் போனபோது பிரித்தானிய அரசாங்கம் பஞ்சாபிலிருந்து படைவீரர்களை கொண்டு வர வேண்டியிருந்தது.[6] இதனூடாக தாக்குதல்களின் கொடுமை எவ்வளவு தூரம் இருந்திருக்கும் என்பதை விபரிக்க வேண்டியதில்லை.

ஆங்கிலத் தேசாதிபதி ரொபட் சாள்மஸ் இக்கலவரம் பற்றி சட்ட சபையில் இடம்பெற்ற விவாதத்தின் போது பின்வருமாறு உரையாற்றினார்.

raged over five provinces, the four honourable expceptions being uva and Anuradapura and ( of Course) the two Tamil provinces of Jaffna and Batticaloa. Whose inhabitants have no community or race, Creed with the Buddist Sinhalese what has been fallen the muslim at Sinhalese land in the five provinces. is that their property has been looted. their houses and shops. have been wracked their mosque has been. desecrated and destroyed and they have themselves been wonded outraged and murdered this is an essential fact known to all. Which we have to keep Clearly before over the minds unobstructed by details. which are fore the present Subsidiary. The immediate steps demanded by the situation. were to punish the guilty and Compensate the victims to that task the government at once set it's hand which task we shall proceed with untill it is carried out for the full indication of law and order and for the righting of the wrongs suffored

by muslim subjects of his mejestyin this Island.

(Sir robert Governer (1913 -1916).

Debate in the lagistative Council of Ceylon 6th of friday 1915)

கலவரம் நடந்து கொண்டிருந்த போது கொள்ளைக்காரர்களும் சிங்கள வன்முறையாளர்களும் முஸ்லிம்களின் வியாபார நிலையங்களிலிருந்த பொருட்களைச் சூறையாடுவதிலேயே மும்முரமாக இருந்தனர். பெரும்பாலும் கடைகள் சூறையாடப்பட்ட பின்னரே கொழுத்தப்பட்டன. கண்டியிலும் கொழும்பிலும் பாணந்துறையிலும் அநேக கடைகளும் வியாபார நிலையங்களும் காடைக்கும்பல்களால் கொள்ளையிடப்பட்ட பின்பே கொழுத்தப்பட்டன. சில இடங்களில் முஸ்லிம்களின் வீடுகள் கூட பலமாகத் தாக்கப்பட்டன. வேறு சில இடங்களில் முஸ்லிம் யுவதிகள் மானபங்கப்படுத்தப்பட்டனர். இவ்வாறு கலவரம் அதன் உச்சளவில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது நுவரெலியாவுக்கு ஓய்வு நாளைக் கழிக்கச் சென்றிருந்த ஆங்கிலேய கவர்னர் Chalmers உடனடியாக கண்டிக்குத் திரும்பினார். பிரித்தானியர்களின் முக்கிய உத்தியோகத்தரான Chalmers உம் அவரது செயலாளர் Stubbs, பொதுப் பொலிஸ் பரிசோதகர் Herbert Dowbiggil ஆகிய மூவரும் கலவரத்தைக் கட்டுப்படுத்த முயன்றவர்களுள் முக்கியமானவர்கள்.[7]

## ஆங்கிலேயரின் எதிர்வினை

கலவரத்தைக் கட்டுப்படுத்த ஆங்கிலேய அரசாங்கம் மேற்கொண்ட எதிர்வினை நடவடிக்கைகளால் சிங்கள வன்முறையாளர்களின் மூர்க்கத்தனங்கள் மேலும் அதிகரித்தன. ஆங்கிலேயர்களைப் பொறுத்தவரை அவர்கள் இவ்வினமோதலை மிகச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தடுமாற்றம் அடைந்தனர். இது சிங்கள-முஸ்லிம் இனக்கலவரம் என்பதை விட ஆங்கிலேய அரசைப் பதவி கவிழ்ப்பதற்கு பெரும்பான்மை இனச் சிங்கள மக்களால் நடாத்தப்படும் திட்டமிட்ட சதி முயற்சியென்றே அரசாங்கம் சந்தேகித்தது. சமகாலத்தில் சர்வதேச அரங்கில் நிகழ்ந்து கொண்டிருந்த சில அரசியல் மாற்றங்களும் இச்சந்தேகத்திற்குக் காரணமாகியது. 1910களில் சில ஜேர்மன் உளவாளிகள் பிரித்தானிய அரசைப் பதவி கவிழ்ப்பதற்கு பௌத்த பிக்குகளின் வேஷத்தில் செயல்படுவதாக வெளிவந்த தகவல்கள் பிரித்தானிய பாராளுமன்றத்தில் பெருத்த வாதப் பிரதிவாதங்களை உண்டுபண்ணியது. எனவே, இலங்கையில் இடம்பெறும் இக்கலவரத்தின் பின்னணியிலும் ஜேர்மன் இருக்கலாம் எனவும் இதற்கு பெரும்பான்மைச் சிங்களவர்கள் திட்டமிட்டுப் பயன்படுத்தப்படுகின்றனர் எனவும் பிரித்தானியர் சந்தேகித்தனர்.

இச்சந்தேகத்தின் பின்னணியில் பிரித்தானிய காலனியவாதிகள் இலங்கையில் இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினர். கலவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பிரித்தானியர்களுக்கு இராணுவப் பதவிகள் வழங்கப்பட்டதோடு இரா ணுவத்தினருக்கும் எல்லையற்ற அதிகாரமும் அளிக்கப்பட்டது. இந்த இராணுவச் சட்டம் மூன்று மாதங்கள் அமுலில் இருந்தது. இதனை சில சிங்கள எழுத்தாளர்கள் Rain of Terror for 120 Days என வர்ணிக்கின்ற அளவுக்கு மிகக் கடுமையாக அமுல்படுத்தப்பட்டது. இராணுவம் மோதல்களையும் வன்முறைகளையும் தடுத்து நிறுத்த எல்லா வகையான நடவடிக்கைகளிலும் இறங்கியது. சந்தேக நபர்களும் வன்முறையாளர்கள் எனக் காட்டிக் கொடுக்கப்பட்டவர்களும் கைது செய்யப்பட்ட னர். இராணுவச் சட்டங்களை மீறிச் செயல்பட்டவர்கள் ஸ்தலத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். கலவரத்தின்போது அமுலில் இருந்த இராணுவச் சட்டத்தின் கீழ் சுமார் 69 பேர் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டனர் என ஆங்கில அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் தற்போது கிடைக்கும் ஆதாரங்களின்படி அதைவிட பெருந்தொகையானோர் இராணுவச் சிப்பந்திகளால் கொல்லப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது.[8]

துப்பாக்கிகள், வேறு ஆபத்தான ஆயுதங்கள் வைத்திருந்தவர் கள் கூட இவ் வாறு கொல்லப்பட்டனர். மதுவொழிப்பு இயக்கத்தினர் உட்பட சுமார் 9பேர் தேசத்து ரோக குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர். எப்.ஆர். சேனாநாயக்க, டீ.எஸ். சேனாநாயக்கா, டீ.பீ. ஜயதிலக, எட்மன் ஹேவாவிதாரண, ஸீ.ஏ. ஹேவா விதாரண, டபிள்யு.ஏ.டீ. சில்வா, ஸீ. படுவன்துடாவ[9] ஈ.ஏ. குணசிங்க என்போர் கைது செய்யப்பட்டவர்களுள் முக்கியமானவர்கள். இது சிங்கள மத்தியதர வர்க்கத் தினரின் தலைவர்களும் புறக்கோட்டை சிங்கள வியாபாரிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சிறைப்பிடிக்கப்பட்டனர். புறக்கோட்டை பெரும் வியாபாரியான பேதிரிசின் மகன் டீ.யீ. பேத்ரிஸ் என்பவர் புறக்கோட்டை முஸ்லிம் வர்த்தகர்களுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டி விட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆங்கில இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். டொன் கரோலின் மகனான எட்மன் ஹேவாவிதாரண ஆயுட்காலத்தண்டனை பெற்று யாழ்ப்பாணச் சிறையில் வைத்து தைபோயிற்றுக் காய்ச்சலினால் உயிரிழந்தார். பேர்தரிசியின் மைத்துனனான என்.எஸ். பெர்ணாந்து ஆயுட்கால சிறைத் தண்டனையை அனுபவித்தார்.[10]

இனத் துவேஷத்தைத் தூண்டிய சிங்களப் பத்திரிகைகளுக்கு எதிராக விசாரணை நடாத்தப்பட்டது. இந்தவகையில் “சிங்கள ஜாதிக”, “சிங்கள புத்திய” போன்ற பத்திரிகைகளுக்கு தடை விதிக்கப்பட்டது. தர்மபாலவின் மதுவொழிப்பு இயக்கமும் தடை செய்யப்பட்டது. ஹங்வெல்லையில் இரு முஸ்லிம்கள் உள்ளிட்டு 13 பேர்

தேசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர். இதில் உள்ளடங்கிய சிங்களவர்கள் கொல்லப்பட்டதோடு முஸ்லிம்கள் கட்டாயச் சேவைக்கு பணிக்கப் பட்டனர். இராணுவ நீதிமன்றத்தில் 63 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட உள்நாட்டுப் படையினருக்குப் பக்கபலமாக இந்தியாவின் பஞ்சாபிலிருந்து வர வழைக்கப்பட்ட படைவீரர்களால் உள்நாட்டு மக்களின் மொழியைப் புரிந்து கொள்ள முடியாமல் போனதால் சிலபோது கலகக்காரர்களையும் பலியானோர்களையும் அவர்களால் தெளிவாக அடையாளங் காண முடியாமல் போன சம்பவங்களும் ஆங்காங்கே இடம்பெற்றது.

## முஸ்லிம்கள் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள்

1915 மே 28இல் தொடங்கி நாடு முழுவதும் பரவி ஜூன் 5இல் தணிந்துபோன கம்பளை இனக்கலவரத்தில் நூற்றுக்கணக்கானோ உயிர் இழந்தனர். அப்பாவி முஸ்லிம்கள் பலர் அநியாயமாக சிங்கள இனவாத சக்திகளால் படுகொலை செய்யப் பட்டனர். வன்முறைக் கும்பல்களால் மேற்கொள்ளப்பட்ட மூர்க்கத்தனமான தாக்கு தல்களுக்கு முஸ்லிம்கள் கொடுத்த விலை மிக அதிகமாகவே இருந்தது.

| | |
|---|---|
| தீக்கிரையான பள்ளிவாயல்கள் | 17 |
| கலவரத்தில் முற்றாக சேதமாக்கப்பட்ட பள்ளிவாயல்கள் | 86 |
| கொள்ளையிடப்பட்ட முஸ்லிம் கடைகள் | 4076 |
| கொல்லப்பட்ட முஸ்லிம்கள் | 35 |
| காயமடைந்த முஸ்லிம்கள் | 189 |
| மானபங்கப்படுத்தப்பட்ட முஸ்லிம் பெண்கள் | 04 [11] |

## 1915 கலவரமும் பொன் இராமநாதனின் நிலைப்பாடும்

முஸ்லிம்களுக்கு எதிராக இத்தனை கொடுமைகள் நடந்தேறிய பின்னரும் சட்டசபையில் இவ்வநியாயங்களுக்கு எதிராக எந்தவொரு தமிழ், சிங்களப் பிரதி நிதியும் குரலெழுப்பவில்லை. கலகம் நடந்த இடங்களில் வரி விதிக்கப்பட வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் அமுலுக்குக் கொண்டுவரவிருந்த சட்டங்களை திரு. பொன். இராமநாதன் மிகக் கடுமையாக எதிர்த்தார். மட்டுமன்றி இனவெறிக்குக் காரணமான குற்றச்சாட்டின் பேரில் சிறைப்படுத்தப்பட்டிருந்த சிங்களவர்களை விடுவிக்க இராமநாதன் இங்கிலாந்து வரையும் சென்று வாதாடினார். இவ்வகை நடவடிக்கையின் பின்னர் சிங்கள மக்கள் மத்தியில் தனக்கேற்பட்டிருந்த மதிப்பினைத் தொடர்ந்து பாதுகாக்கும்

வண்ணம் இராமநாதன் முஸ்லிம் எதிர்ப்புப் பிரச்சாரத்தை நடாத்தி வந்தார். Royal Assiatic Society இல் இடம்பெற்ற சொற்பொழிவொன்றில் "இலங்கை முஸ்லிம்கள் தென்னிந்தியாவிலிருந்த இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாற்றப்பட்ட இழிந்த சாதியைச் சேர்ந்த தமிழர்களின் சந்ததியினரே" என்ற கருத்தை முன்வைத்து முஸ்லிம்களின் தனித்துவத்தையும் அரசியல் பிரதிநிதித்துவத்தையும் கூட மறுத்த தோடு நஷ்டஈடு வழங்குவதையும் ஆட்சேபித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து 1917ல் சிங்களவர்களைத் தோற்கடித்து சட்டசபை உறுப் பினராக அவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை அவரது செல்வாக்கு உயர்ந்திருந்தது. முஸ்லிம்களுக்குரிய அரசியல் பிரதிநிதித்துவத்தை அனுபவித்துக் கொண்டு முஸ்லிம் களும் தமிழர்களே என்று வாதித்து வந்த பொன் இராமநாதன் ஏன் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்டார். முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இவ்வன்முறைகள் பௌத்த சிங்கள இனவாத உணர்வுகளின் வெளிப்பாடுகள் என்பதை அடையாளம் கண்டு எதிர்காலத்தில் அத்தகைய தாக்குதல்கள் (1983 ஜூலைக் கலவரம்) தமிழ் மக்கள் மீதும் கட்டவிழ்க்கப்படலாம் என்பதை புரிந்து கொண்டு அவற்றிலிருந்து தமது மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது சிங்களத் தலைவர்களின் சார்பாக அவர் செயல்பட்டதற்கான காரணங்கள் என்ன என்பதை மிக நுணுக்கமாகப் பரிசீலிக்க வேண்டியது இன்றைய தமிழ் தேசியவாதப் போராட் டத்தின் பாற்பட்டது.

இராமநாதனின் இந்த முஸ்லிம் எதிர்ப்பு நிலைப்பாடு தமிழ் சமூகத்தின் மீதும் நம்பிக்கையற்ற ஒரு எச்சரிக்கை உணர்வுடனேயே தம் எதிர்கால நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய சூழ்நிலைக்கு முஸ்லிம்களைத் தள்ளிவிட்டது. தமிழ் தேசியப் போராட்டத்திலிருந்து முஸ்லிம்களை மொத்தமாகவே தூரமாக்கிவிட்டது.[12] 1915 கலவரத்தைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டசபை அமர்வுகளில் (Lagislative Council Session) பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் தமக்கான பிரதிநிதிகள் இன்றி இருந்தமையே அக்கொடுமைகளுக்கு எதிரான நஷ்டஈட்டுத் தொகையைக் கூட அவர்களால் பெற்றுக் கொள்ள முடியாமல் போனமைக்கு முக்கிய காரணமாகும்.

## முடிவுரை

1915இல் இடம்பெற்ற முஸ்லிம்கள் மீதான கொடூரமான தாக்குதல்கள் இருபதாம் நூற்றாண்டில் இலங்கையின் இனப்பகை முரண்பாட்டுப் பாதையில் முகிழ்ந்த முதற் பெரும் மோதுகை என்பதை ஒரு நூற்றாண்டு வரலாறு நமக்கு உணர்த்தி நிற்கின்றது. இவ்வன்முறைகளும் கொடூரங்களும் அப்போது முஸ்லிம் சிங்கள உறவுகளில் பெருத்த பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. கலவரத்தைத் தொடர்ந்து முஸ்லிம்கள்

சிங்கள சமூகத்திலிருந்து விலகியே இருக்கத் தொடங்கினர். அவர்களுக்கு எதிரான தாக்குதல்களால் ஏற்பட்ட பௌதீக உளவியல் தாக்கங்கள் தாங்கள் அநாதரவான வர்கள் என்ற பிரக்ஞையை முஸ்லிம்களிடம் வளர்த்தது. காலனிய ஆங்கிலேய அரசு கலவர வேளையில் முஸ்லிம்களைப் பாதுகாக்க முன்வந்தது. எனினும் பெரும் பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் செயற்பட்டுவந்த இனப்பகைவர்களால் திட்ட மிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களிலிருந்து முற்றாகவே முஸ்லிம்களைப் பாதுகாக்க அவ்வரசினால் முடியவில்லை. கலவரத்திற்குத் தூண்டுதலளித்த இன வாதப் பாசிஸப் பிரச்சாரம் கலவரத்தின் பின்னரும் தொடர்ந்தமை இன்னொரு முக்கிய அம்சமாகும். முஸ்லிம்களுக்கு எதிரான காழ்ப்புணர்விலிருந்து சிங்கள இனவாதம் இன்னும் விடுபடவில்லை என்பதையே அப்போதைய நிகழ்வுகளும் இப்போதைய நிகழ்வுகளும் காட்டி நிற்கின்றன.

## அடிக் குறிப்புகள்


1. Vamadaven V., Story of Sri lanka Muslims, P. 46,47,48.
2. The 1915 riots in Ceylon. A Symqosium Journal of Asian Studies Vo. XXIX 1970.
3. Exil Vol. II No. 07 May - July 1999.
4. Michel Robert (Edt) Collective Identitrer Nationalism and Protest in Modern Sri Lanka.
5. Sri Lanka 50 Years of Independence, A Ravaya Publication 1998.
6. Hulugalla H.A.J. First prime minister of Sir lanka. Don. Stephen Seneneyaka. Hulugalle Dictionaris publication 2000.
7. Goonetileka H.A.I. Images of Sri Lanka through American eyes. Travellers in Ceylon in 19th and 20 th Centuries. United state information service / Embassy of the United state of America Colombo, Sri Lanka 1983, P. 280.
8. Nira wickramasingha Ethnic Politics in Colonial Sri lanka.
9. முஹம்மது சமீம், ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள், சென்னை இந்தியா.
10. விக்டர், முஸ்லிம் தேசமும் எதிர்காலமும், அடையாளம் பதிப்பகம், இந்தியா 1999/2002
11. Sri Lanka 50 Years of Independence, A Ravaya Publication 1998.
12. நீதிமுரசு 2001 சட்டக் கல்லூரி கொழும்பு.



# காலி கலவரம் 1982

02

1982ல் காலியில் இடம்பெற்ற முஸ்லிம்கள் மீதான சிங்கள வன்முறையும் இனப்பிரச்சினை வரலாற்றில் நுணுகி நோக்கத்தக்கதொன்றாகும். கலவரம் இடம்பெற முன்னரும் முஸ்லிம்கள் மீது சிங்களப் பகை முரண்பாடுகள் உள்ளக ரீதியில் புகைந்து கொண்டிருந்தன. அதன் புறவெளிப்பாடாக சிற்சில அசம்பாவிதங்கள் ஆங்காங்கே நடைபெற்று வந்தன. புகைந்து போன்று அமுங்கிக் கிடந்த காழ்ப் புணர்வுகள் முஸ்லிம்களுக்கு எதிராக திரட்சியடைந்தபோது ஒரு பெரும் கலவரமாக வெடித்தது.

காலி கராப்பிட்டிய வீதியிலுள்ள தங்கெதர எனும் கிராமத்தின் 'கரந்துகொட' சந்தியில் வைத்து இப்பிரச்சினை ஆரம்பித்தது. இச்சந்தியில் மிக நீண்டகாலமாகவே ஒரு சிங்கள வர்த்தகர் மரக்கறிக் கடையொன்றை நடாத்தி வந்தார். அக்கடைக் கட்டிடம் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தது. மனிமல் (விமலசேன) என்ற அந்த சிங்கள வியாபாரி வாடகை செலுத்தியே அக்கடையை நடாத்தி வந்தார். இம்மரக்கறிக் கடை முதலாளிக்கும் முஸ்லிம் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினை காரணமாக ஆத்திரமடைந்த முஸ்லிம் மற்றொரு சிங்களவரைப் பயன்படுத்தி மரக்கறிக் கடையை அங்கிருந்து அகற்ற முயற்சித்தார். இரவு

வேளையொன்றில் கடையின் கூரை வளையில் கயிற்றைக் கட்டி ரெக்டர் வண்டியொன்றில் அதனை இணைத்துப் பலமாக இழுத்தபோது அக்கடை கூரையுடன் கீழே சரிந்தது. இச்சம்பவமே காலிக் கலவரம் இடம்பெற்றதற்கான உடனடிக் காரணமாக அமைந்தது எனலாம். இச்சம்பவத்தில் முஹம்மது நாஸிம் மற்றும் அவரது சகோதரர் பாயிஸ் ஆகிய இருவரும் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்விடத்தில் ஆரம்பித்த கலவரம் துவவத்தை எனும் முஸ்லிம் கிராமத்தை ஊடறுத்து காலி மாவட்டத்தில் நகரம் முதல் பெரும்பாலான முஸ்லிம் பிரதேசங்களுக்குப் பரவியது. மகுளுவெவ, தலாபிடிய, சோலை, ஹிரும்புர, நாவின்ன போன்ற கிராமங்களில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல கடைகள் கொளுத்தப்பட்டதோடு வீடுகள் பல கல்லெறிக்கு உட்பட்டு சேதப்படுத்தப்பட்டன. பல வீடுகளிலிருந்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான பொருட்கள், கால்நடைகள் என்பன கொள்ளையிடப்பட்டதோடு முஸ்லிம்கள் பலர் காயத்துக்குள்ளாக்கப்பட்டனர். சுமார் 2 வாரங்கள் வரை இதன் பதற்றம் தொடர்ந்தது.

## துவவத்தைக் கிராமம் (சமகி வத்த கம)

1982 கலவரத்தின்போது காலி மாவட்டத்தில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் கிராமம் துவவத்தை எனலாம். இக்கிராமம் கராப்பிட்டிய-காலி பிரதான பாதையிலிருந்து உள்நோக்கி சுமார் அரை மைல் தொலைவில் அமைந்துள்ளது. கலவரம் நடைபெற்றபோது அங்கு 27 முஸ்லிம் குடும்பங்கள் வசித்து வந்தன. கலவரத்தைத் தொடர்ந்து அவ்விருபத்தியேழு முஸ்லிம் குடும்பங்களும் விரட்டப்பட்டன. அவர்களது வீடுகளும் கொள்ளையிடப்பட்டன. அகதிகளாக வெளியேறிய முஸ்லிம்கள் தங்கெதரவில் உள்ள முஹைதீன் ஜும்மாப் பள்ளிவாயலில் தஞ்சம் புகுந்தனர். கரந்தகொட பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகிலிருந்த ஒரு முஸ்லிம் வீட்டிலிருந்து மட்டும் சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டன. அவ்வீடும் முற்றாக எரிக்கப்பட்டு சாம்பலாக்கப்பட்டது. கோங்ஹா, மிலிந்துவ போன்ற அயல் பகுதிகளையும் கூட இக்கலவரம் விட்டு வைக்கவில்லை.

அகதிகளாய் தஞ்சம் புகுந்த துவவத்தை முஸ்லிம்களுக்கு சில முஸ்லிம் தனவந்தர்களும் மற்றும் சில முஸ்லிம் பரோபகாரிகளும் தம்மாலானவற்றால் உதவினர். ஒரு சில நாட்கள் கழித்தே அரசாங்கத்தின் நிவாரண உதவிகள் இம்மக்களுக்குக் கிடைத்தன. முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ நிவாரணப் பொருட்கள் வழங்குவதில் மும்முரமாகச் செயற்பட்டார் என கூறப்படுகின்றது. 1982ம் ஆண்டைய இக்கலவரத்தில் காலி மாவட்டத்தில் அனேகம் பாதிக்கப்பட்ட மற்றொரு கிராமமே மகுளுவெவ பகுதியாகும். இங்கு இரு முஸ்லிம்கள் சிங்கள வன்முறையாளர்களின்

கத்திக் குத்துக்கு இலக்காகி மரணமாகினர். கலவரத்தில் உக்கிரமாக ஈடுபட்ட சிங்கள வன்முறையாளர்கள் பெரும்பாலும் கூரான கத்திகளைப் பயன்படுத்தியே கணிசமான முஸ்லிம்களைக் காயப்படுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இக்கலவரத்தினால் ஏற்பட்ட பதற்றம் சுமார் 2 வாரங்கள் வரை நீடித்தது. கலவரம் பற்றிய வதந்திகளே பதற்றம் எல்லா இடங்களிலும் காட்டுத் தீ போல் பரவக் காரணமாகியது. ஹிரும்புற, நாவின்ன போன்ற கிராமங்களில் பிரதான பாதைகளில் அமைந்திருந்த வீடுகள் பொற்களாலும் கற்களாலும் தாக்கப்பட்டு பலத்த சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டன. சிங்களக் கிராமங்களால் முற்றாகவே சூழப்பட்டிருந்த முஸ்லிம்கள் ஏனைய பகுதிகளுக்கு பொது வாகனங்களிலோ சொந்த வாகனங்களிலோ செல்ல முடியாத ளவுக்கு பதற்றம் கடுமையாக இருந்தது.

முஸ்லிம்கள் இரவு வேளையில் குறிப்பிட்ட பாதுகாப்பான சில வீடுகளுக்குச் சென்று தஞ்சம் பெற்று வந்தனர். பிரதான பாதைகளை விடுத்து கிராமங்களின் உட்புறம் அமைந்திருந்த பாதுகாப்பான வீடுகளிலேயே முஸ்லிம்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று இரவைக் கழித்தனர். ஹிரும்புறவைச் சேர்ந்த ஆசிரியர் ஹுசைன் என்பவர் உயர்தரப் பரீட்சை மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். கலவரம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் குறிப்பிட்டதொரு பரீட்சை மண்டபத்திற்கான வினாப் பத்திரங்கள் அவரிடமே இருந்தது. அவர் பதற்ற நிலையின் காரணமாக நிலவிய பாதுகாப்பின்மையைக் கருத்திற் கொண்டு பொலிஸாருக்குத் தொலைபேசி மூலம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்தபோது பொலிஸாரை வரவழைத்து வினாப்பத்திரங்களை ஒப்படைத்துவிட்டு வீட்டிலேயே தங்க நேரிட்டது. மேற்பார்வைக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பி உயிரோடு வருவதற்கு உத்தரவாதம் இல்லாத ஒரு சூழலே கலவரத்தின் போது நிலவியது.

இவ்வன்முறையின்போது காலி நகரிலிருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல கடைகளும் கட்டிடங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. மற்றும் பல முற்றாகச் சூறையாடப்பட்ட நிலையில் சேதமாக்கப்பட்டன. எரிக்கப்பட்ட முஸ்லிம் கடைகளுள் தௌபீக் அன்ட் சன்ஸ், அப்துல் ரஹீம், பாஸ்ட் மரிக்கார், சிரான்ஸ் சைக்கிள் பெலஸ், முஹம்மட் அன்ட் சன்ஸ், சீராஸ் ஹாட்வெயார் என்பவை முக்கியமானவை. இதன் மூலம் அப்போதைய பெறுமதியில் மிகப் பாரியதொரு சேதம் ஏற்பட்டது. இக்கலவரத்தில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் தொகை பற்றிய சரியான கணிப்பீடுகள் கிடைக்கப் பெறவில்லை. ஆறு பேர் கொல்லப்பட்டதாக ஒரு தகவல் உள்ளது. சுமார் 60 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். முஸ்லிம்களுக்குச் சொந்தமான 5 வாகனங்கள் எரிக்கப்பட்டன. நீதியையும் பாதுகாப்பையும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்த வேண்டிய பொலிஸாரும் சிங்கள வன்முறையாளர்க

ளுக்குச் சார்பாகவே நடந்து கொண்டனர். கலவரம் இடம்பெற்று சில நாட்களில் அது பற்றி பூரணமான ஒரு விசாரணையை நடாத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் ஆணைக்குழுவொன்றை நியமித்தது. இவ்வாணைக்குழுவில் பெரும்பாலும் சிங்களவர்களே இடம்பெற்றனர். அவர்கள் கலவரத்தை ஏற்படுத்தி தீவிரப்படுத்திய வன்முறையாளர்களுக்குச் சார்பாகவே சாட்சியங்களையும் வாக்கு மூலங்களையும் பதிவு செய்தனர். கலவரம் இடம்பெற்ற அடுத்த தினமே அப்போதைய பிரதமர் ஆர்.பிரேமதாஸ சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் துவவத்தைக்கும் விஜயம் செய்து நடந்தவற்றை நேரில் பார்வையிட்டார். முதலில் காலி பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற அவர் அங்கிருந்த முறைப்பாட்டுப் புத்தகங்கள் அனைத்திற்கும் முத்திரையிட்டு விட்டே துவவத்தை முஸ்லிம் கிராமத்திற்கு வருகை தந்தார் எனக் கூறப்படுகிறது. சேதப்படுத்தப்பட்ட பள்ளிவாயல்களைப் பார்வையிட்டு விட்டு இரு லொறிகளில் காற்சட்டை, சேட் மற்றும் உலர் உணவுகளை அவர் அனுப்பி வைத்தார்.

ஜே.ஆரின் ஆட்சியின் போது நிகழ்ந்த காலிக் கலவரம் குறித்து அப்போதைய பாராளுமன்றத்தில் எந்தவொரு முஸ்லிம் பிரதிநிதியும் குரலெழுப்பவில்லை. ஏ.ஸி.எஸ். ஹமீத் வெளிவிவகார அமைச்சராகவும், ஏ.எச்.எம். அஸ்வர் பாராளுமன்றத்தில் ஐ.தே.கட்சியின் முக்கிய பிரதிநிதிகளாக விளங்கினர். அதேவேளை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ் விடயத்தில் போதிய கரிசனை காட்டவில்லை என்றே கூறப்படுகின்றது. எதிர்கட்சித் தலைவராக இருந்த அப்பா பிள்ளை அமிர்தலிங்கம் முஸ்லிம்கள் மீதான இவ்வன் முறையை பாராளுமன்றத்தில் கண்டித்து உரையாற்றினார். அதனைத் தீர விசாரிக்க ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு அரசாங்கத்தை வேண்டியதற்கு இணங்க ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழு விசாரணைகளை நடாத்தியபோது காயப்பட்ட முஸ்லிம்கள் எவரும் அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படவில்லையெனவும் முஸ்லிம்கள் சார்பாக எந்தவொரு முறைப்பாடும் மேற்கொள்ளப்படவுமில்லை எனவும் கூறி முஸ்லிம்கள் மீதான கொடூரங்களை மூடி மறைக்க முனைந்தனர். ஆனால் கலவரம் இடம்பெற்றபோது காயப்பட்ட முஸ்லிம்கள் காலியின் அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட மறுக்கப்பட்டதனால் பெரும்பாலான முஸ்லிம்கள் தனியார் வைத்தியசாலையிலேயே அனுமதிக்கப்பட்டனர் என்பதே உண்மை. இந்தளவிற்கு பொலிஸாரும் வைத்தியசாலை அதிகாரிகளும் சிங்களச் சார்பு நிலைப்பாட்டையே எடுத்திருந்தனர். முஸ்லிம்கள் தரப்பிலான சேதமும் நஷ்டமும் திட்டமிட்டு மறைக்கப்பட்டன.

கலவரம் தீவிரமாகவும் உக்கிரமாகவும் நடந்தேறி முஸ்லிம்கள் முற்றாகவே விரட்டப்பட்ட துவவத்தை எனும் முஸ்லிம் கிராமம் மீண்டும் 1984இல் பிரதமர் ஆர். பிரேமதாஸாவினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அதனது பெயரும் சமகி வத்த கம என மாற்றம் செய்யப்பட்டது.

தகவல் வழங்கியோர் :

ஏ.டபிள்யு. முஜ்தபா (ஓய்வு பெற்ற ஆசிரியர், நாவின்ன)

எம்.எஸ்.எம். ஹுசைன் (ஓய்வு பெற்ற ஆசிரியர், ஹிரும்புற)

ஏ.எச்.எம். ஜிப்ரி (துவவத்தை பள்ளி பிரதம நம்பிக்கையாளர்)

ஏ.டபிள்யு.பீ. முஹம்மத் (ஓய்வு பெற்ற ஆசிரியர், கட்டுகொட)

எம்.எச்.ஏ. கபூர் (தலைவர், தொல் பொருளியல் கூடம், காலி கோட்டை.)



03

# பன்னல அலபெடகம வன்முறைகள் - 1999

1999 பெப்ரவரி 06ம் திகதி சனிக்கிழமை நள்ளிரவு சுமார் 12:30 மணியிருக்கும். பன்னலையைச் சேர்ந்த பிரியங்கவும் நண்பர்கள் நால்வரும் அலபெடகம சந்தியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சம்சு தீன் நானாவின் தேனீர் கடைக்கு ஒரு காரில் வந்திறங்குகின்றனர். ஆர்ப்பாட்டமாக உள்ளே நுழைகின்றனர். அதிகாரத் தொனியில் உணவையும் தேனீரையும் வரவழைத்துச் சாப்பிடுகின்றனர். சாப் பிட்டு முடிந்ததும் வழமைபோல் அன்றும் பணம் தர மறுக்கின்றனர். முன்னால் தொங்கிக் கொண்டிருந்த வாழைக்குலையைத் தூக்கி ரொட்டி பாரின் மீது அடித்துச் சிதைக்கின்றனர். எதிர்த்த சம்சுதீன் நானாவையும் உள்ளே நுழைந்து தாக்குகின்றனர். கடை அல்லோல கல்லோலப்படுகிறது. அப்போது பக்கத்து திருமண வீடொன்றில் விழித்திருந்த முஸ்லிம் இளைஞர்கள் சத்தம் கேட்டு என்னவோ ஏதோ என்று ஓடி வருகின்றனர். இதனைக் கண்ட பிரியங்க குழுவி னர் காரில் தப்பியோடுகின்றனர். ஆனால் துரதிஷ்ட வசமாக பிரியங் கவால் மாத்திரம் தப்பியோட முடியவில்லை. அந்நேரம் சூழ்ந்துள்ள அபாயத்தை உணர்ந்து அவனது தந்திர மூளை வேலை செய்கிறது. உண்மையான குற்றவாளிகள் தப்பித்து விட்டதாகவும் தான் காப்பாற் றவே வந்ததாகவும் சமாளிக்க முற்படுகிறான். அப்போது திடீரென எங்கிருந்தோ வந்த ஹுஸைன் நானா தனது காரில் பிரியங்கவை ஏற்றிக் கொண்டு பறந்துவிடுகிறார். உண்மையில் பிரச்சினைக்கு

மூலகாரணம் பிரியங்கதான் என்பதைத் தெரிந்து கொண்ட முஸ்லிம் இளைஞர்கள் தாமும் ஒரு வேனை எடுத்துக் கொண்டு காரைத் தொடர்ந்து சென்றனர். இடையில் பிரியங்கவிற்கும் பின்னால் சென்றவர்களுக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பில் முடிகிறது. அப்போது ஓடி வந்த ஊர்மக்களும் வந்துசேரவே சுமார் 100 பேர் அளவில் அங்கு நிறைந்து விடுகின்றனர். பரஸ்பரத் தாக்குதலால் பிரியங்க சுய நினைவிழந்து விடுகிறான். அந்நேரம் விடயமறிந்தோ அல்லது தற் செயலாகவோ ஒரு பொலிஸ் வாகனம் அங்கு வருகிறது. பிரியங்கவைச் சுமந்து கொண்டு வைத்திய சாலைக்குச் செல்கிறது. மறுநாள் பிரியங்க இறந்து விட்டதாகச் செய்தி வருகிறது.

இதுதான் 1999 பெப்ரவரி 06, 08ம் திகதிகளில் பன்னல, அலபெடகம பகுதிகளில் இடம்பெற்ற கலவரத்திற்கான காரணமாகும். கொல்லப்பட்ட பிரியங்க, அமரே என்பவரின் தலைமையில் இயங்கிவந்த ஒரு நாசகாரக் கும்பலைச் சேர்ந்தவன். இந்தக் கும்பல் நீண்டகாலமாக பன்னல, அலபெடகம பகுதிகளில் பலவிதமான அட்டகாசங்களைப் புரிந்தும் கப்பம், கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு என்பனவற்றில் ஈடுபட்டும் வந்தது. இறந்து போன பிரியங்க தனது மனைவியைக் கூட கழுத்தை நெரித்துக் கொலை செய்தவன் என்பதும் பரவலாகப் பேசப்பட்ட விடயம். இவன் பல முறை சிறைச்சாலைகளைச் சந்தித்தவன், பல்வேறு குற்றங்களின் சூத்திரதாரியாக இவன் காணப்பட்டதால் தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டியவன் என்ற கருத்தும் சிங்கள மக்கள் மத்தியில் பரவி இருந்தது. எனினும் அப்போது அவன் கொல்லப்பட்ட முறையே சிங்களவர்களை விஷனத்திற்குள்ளாக்கியது.

அவர்களது அடாவடித்தனங்கள் 1994ம் ஆண்டு சந்திரிக்காவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னரே அதிகரித்தன. இதற்கான காரணம் அப்பிரதேசத்தின் முன்னாள் அமைச்சரான அனுரா பிரியதர்சன யாப்பாவின் முக்கிய மெய்க் காவலர்களாக இந்த குண்டர்களே செயற்பட்டு வந்தார்கள். பன்னல அலபெடகம கலவரத்தின் போதும் இவ்வமைச்சரின் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தியே இவர்கள் தமது அராஜகங்களையும் வன்முறைகளையும் கட்டவிழ்த்தனர். அந்த அராஜகங்களாலும் அடாவடித்தனங்களாலும் பொறுமை இழந்த முஸ்லிம் இளைஞர்கள் கொதித்தெழுந்தனர். அதன் விளைவே இந்தக் கொலைச் சம்பவம்.

இச்சம்பவத்தின் தொடராக பன்னல, அலபெடகம பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக பல அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன:

* அலபெடகமவின் எல்லைப் பகுதியான ஹஸ்மியாவத்தவில் ஓர் ஓலைக் கூரை போட்ட மண் வீடு பூரணமாக எரிக்கப்பட்டது. வீட்டில் இருந்த சுமார்

40,000 பெறுமதியான வியாபாரப் பொருட்கள் (இஞ்சி) முற்றாக எரிந்தன. வீடு, வீட்டுப் பொருட்களின் நஷ்டம் எவ்வளவென கணிப்பிடப்படவில்லை.

* அலபெடகமவின் எல்லைப் பகுதியில் அமைந்திருந்த பரக்கத்துல்லாஹ் என்பவருக்குச் சொந்தமான கோழிப் பண்ணையில் இருந்து திருடப்பட்ட 1000 கோழிகளில் 150 கோழிகள் மீளக் கிடைத்தன. அத்தோடு பண்ணையில் இருந்த 15 ஆடுகளும் களவாடிச் செல்லப்பட்டன.

* அலபெடகம தபால் நிலையச் சந்தியில் அமைந்திருந்த ஜனாப் ஷரீப்தீன் என்பவருக்குச் சொந்தமான சிறியளவிலான கார்மண்ட் ஒன்றும் உடைத்துச் சேதமாக்கப்பட்டது. அவரது வீடு, தளபாடங்களுக்கு ஏற்பட்ட சேதத்தின்படி சுமார் 1,57,000 நஷ்டமேற்பட்டது.



அலபெடகமவில் தாக்கப்பட்ட கடை

* அலபெடகம சந்தியில் சிங்களவர் ஒருவர் நடாத்திவந்த சலூன் ஒன்றின் முன்கண்ணாடி உடைத்துச் சேதமாக்கப்பட்டது. இதற்கான நஷ்டயீட்டுத் தொகையான சுமார் 2,000 ரூபாவை முஸ்லிம்கள் உடனே செலுத்தினர்.

* பன்னல பசாரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான அப்போது 28 கடைகள் காணப்பட்டன. இவற்றில் பல கடைகள் உடைத்து சேதமாக்கப்பட்டிருந்தன. எனினும் அவற்றை நேரடியாகச் சென்று பார்வையிட முடியாதளவிற்கு அப்பிரதேசத்தில் பதற்றம் நிலவியது.

* முஸ்லிம்களது உடமைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் போக முஸ்லிம்

கள் நேரடியாகவும் தாக்கப்பட்டார்கள்.

* ரகீப் என்பவர் கடுமையாகத் தாக்கப்பட்டு மேலாடை அகற்றப்பட்டு அனுப் பப்பட்டார்.

* அலபெடகம எல்லைப் பகுதியில் இருந்து புதிதாக திருமணம் முடித்து வந்த புது மணமகனும் அவரது மைத்துனர் ஒருவரும் வெளல்கெலே என்ற இட த்தில் நிர்வாணமாகக் கட்டிவைக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டனர். மண மகனின் வலக்கரம் முறிக்கப்பட்டது. இவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

* கொழும்பில் இருந்து அலபெடகமவுக்கு திருமணம் ஒன்றிற்காக வந்த முஸ் லிம்களும் தாக்கப்பட்டனர். பெண்களின் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டும் பர் தாக்கள் கழற்றப்பட்டும் இம்சைப்படுத்தப்பட்டனர். மணமகன் மாத்திரம் விடப்பட்டு ஏனையயோர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

* இப்பிரதேசத்திற்கு தஃவாவிற்காக வந்த தப் லீக் ஜமாஅத்தினர் குழு ஒன்றும் தாக்கப்பட்டது.

* இது தவிர இறந்து போன பிரியங்கவின் சவ ஊர்வல தினத்தில் சுமார் 4000 பேர் இணைந்து பெரும் ஊர்வலம் ஒன்றை நடாத்தி பன்னலயில் உள்ள முஸ்லிம் களின் கடைகளையெல்லாம் தீ வைக்கத் திட்டமிட்டனர். அவ்வேளையில் தடுக்க முற்பட்ட பொலிசாருக்கும் அக்குழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மேலும் மூவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பொலிஸ் தரப்பிலும் சிலர் காயமடைந்தனர். ஒரு மரணம்



நான்கு மரணங்களானதால் ஆத்திரமடைந்த அவர்கள் முஸ்லிம்களைக் கண்ட இடங்களில் எல்லாம் தாக்கத் தொடங்கினர். நீர் கொழும்பு குருநாகல் வீதியின் இடையில் முஸ்லிம்கள் வழிமறித்துத் தாக்கப்பட்டனர். குளியாப்பிட்டிய-பன்னல வீதியின் இடையில் யக்வில எனுமிடத்தில் முஸ்லிம்கள் இடைமறித்துத் தாக்கப் பட்டனர்.

இவ்வாறு எல்லாப் புறத்தாலும் சுற்றி வளைத்துத் தாக்கப்பட்டதால் சுமார் ஒரு வாரகாலமாக அலபெடகம, பம்மன்ன போன்ற இடங்களுக்கு முஸ்லிம்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலமை இருந்தது. இதனால் அதிகம் பாதிக்கப் பட்டது அன்றாடம் ஊருக்கு வெளியில் சென்று வியாபாரம் செய்து பிழைக்கும் முஸ்லிம்கள்தான். அத்தோடு அலபெடகமவில் பாடசாலைகள் சுமார் ஒரு வார காலமாக நடைபெறவில்லை. பம்மன்னையிலும்கூட இரண்டு நாட்கள் பாட சாலைகள் மூடப்பட்டிருந்தன. பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு இலங்கை ஜமா அத்தே இஸ்லாமி, ஷபாப் போன்ற இயக்கங்கள் பல உதவிகளைச் செய்தன. அத்தோடு நீர்கொழும்பு, கினியம, கல்-எலிய, ஹொரம்பாவ, ஆரிகாமம் போன்ற ஊர்களில் இருந்தும் பலவகையான உதவிகள் கிடைத்தன என்பதும் குறிப்பிடத் தக்கது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இவ்விடயத்தில் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமது அரசியல் ஆசனங்களை பாதுகாத்துக் கொள் ளும் வகையில் பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருந்த முஸ்லிம் அமைச்சர்கள் இதனை ஒரு அரசியல் பிரச்சினையாக மட்டுமே பார்க்க முற்பட் டனர்.

அலபடகம பள்ளிவாசல் தலைவரான அல்-ஹாஜ் ஏ. எல். எம். அன்ஸார் முக்கியமான அமைச்சர் ஒருவருடன் தொலைபேசியில் இது சம்பந்தமாகத் தொடர்பு கொண்டபோது, 'ஐ சே! நீங்க என்ன தேத்தண்ணி குடிக்க வாற ஆளக் கொல் றீங்க...?" என்பதுவே அவரது பதிலாக இருந்தது. பொறுப்பு வாய்ந்த ஒரு தலை வரின் பொறுப்பான பதிலல்ல இது. அதேபோன்று அப்பிரதேச முக்கியஸ்தர்களில் ஒரு வரான ஹமீத் ஹம்ஸா என்பவர் அதே அமைச்சருடன் தொடர்பு கொண்ட போதும், 'எங்கட ஆக்களை U.N.P. கார நீங்கள் கொன்றிருக்கிறீர்கள்.. சம்பந் தப்பட்ட ஆக்களைப் பிடித்துத் தாருங்கள்.." என்று கூறியுள்ளார். அவருக்கு முஸ்லிம் சமூகத்தை விட தனது கட்சியின் மீதும் ஆசனத்தின் மீதுதான் பற்று அதிகமாக இருந்தது. கலகெதர பிரச்சினையின் போது ரவூப் ஹக்கீமுக்கும் அலவி மௌலா னாவுக்கும் நேரடியாகப் போய்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியுமென்றால் ஏன் இங்கு உரிய வேளையில் எந்தத் தலைவருக்கும் வரமுடியாமல் போனது என அப்போது மக்கள் கேள்வி எழுப்பினர்.

இப்பகுதியின் முன்னாள் அமைச்சரான அனுரா பிரியதர்ஷன யாப்பாவும் இப்பிரச்சினையில் இறுக்கமான போக்கையே கடைப்பிடித்தார். சில முஸ்லிம்கள் வன்முறையின் தொடக்கத்திலேயே அவரோடு தொடர்பு கொண்டபோது தான் யாரையும் சந்திக்க முடியாது எனக் கூறி தனது பொறுப்பிலிருந்து நழுவிக் கொண்டார். பின்னர் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது, பிரியங்கவைக் காரில் ஏற்றிச் சென்றவரை தம்மிடம் ஒப்படைக்கவேண்டுமென்றும், இறந்தவர்களுக்காக முஸ்லிம்கள் சுமார் ஏழு லட்சம் ரூபா நஷ்டஈடு தரவேண்டும் எனவும் அவர் கோரினார். இப்பிரதேசத்தில் இடம்பெற்ற இனவன்முறையின் பின்னணியில் இவரது செல்வாக்கு நன்கு பயன்படுத்தப்பட்டது என்பது இதிலிருந்து தெளிவாகியது.



முஸ்லிம்கள் தரப்பில் சிலரைப் பலி கொள்ளாதவரை யாப்பா ஓயமாட்டார் என்று சட்டத்தரணி ஒருவர் கூறுமளவுக்கு முன்னாள் அமைச்சரின் இனவாத அணுகுமுறை காணப்பட்டது. பன்னல, அலபெடகம சம்பவத்தில் முஸ்லிம்கள் தரப்பிலும் சில தவறுகள் இடம்பெற்றன என்பதை மறுப்பதற்கில்லை. அவற்றுள் முஸ்லிம்கள் செய்த மிகப் பெரும் தவறு பிரியங்கவைக் கொலை செய்ததாகும். இது இனவாத சக்திகள் தங்களால் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகளையும் தாக்குதல்களையும் நியாயப்படுத்துவதற்கான காரணமாக அமைந்தமை துரதிஷ்டமே.

இச்சம்பவத்தில் பிரியங்கவைக் காரில் காப்பாற்றிக் கொண்டுசென்ற ஹுஸைன் என்பவர் தொடர்ந்தும் அப்போது தலைமறைவாகி இருந்தமை பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. அதேபோன்று, முஸ்லிம்கள் இருவர் ஆயுதங்களுடன் பொலிஸாரிடம் சிக்கியாதாகவும், மிகுந்த சிரமத்தின் பின்பு தான் அவர்களை வெளியில் கொண்டுவந்ததாகவும் கூறப்பட்டது. இவையனைத்துமே இத்தகைய சம்பவங்களின் போது முஸ்லிம்கள் தரப்பில் இடம்பெற்ற தூரநோக்கற்ற அணுகுமுறையையே காட்டி நின்றன.

இதற்கிடையில், இப்பிரச்சினை சிங்கள, முஸ்லிம் தரப்பிலான தனிப்பட்ட இரு குழுக்களுக்கிடையிலான மோதலாக இருக்கலாம் என்றும் நம்பப்பட்டது. இந்தக் குழுமோதலை மறைக்கவே இப்பிரச்சினையை இனக்கலவரமாக மாற்றும் சில தீய நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டது. எது எவ்வாறிருப்பினும் முஸ்லிம்கள் தரப்பிலேயே அனேக சேதங்களும் அழிவுகளும் ஏற்பட்டமை மிகவும் துரதிஷ்டமே.

இவ்விடயம் பற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர் அப்துல் ஹமீத் கருத்துத் தெரிவிக்கையில், முஸ்லிம் இளைஞர்கள் உணர்ச்சிவசப்பட்டு கொலை வரைப் போனது பிழை என்றும், சிங்களவர்களை எதிர்க்கும் பலம் எம்மிடம் இல்லாததால் முடிந்தளவு பொறுமையைக் கையாண்டு இணங்கிப் போகவே முயலவேண்டும் எனவும், இனி வரும் காலங்களில் பொதுத்தாபனங்களும் அரசியலும் இணைந்த வகையில் உருவாக்கப்படும் நிறுவனங்களின் ஊடாகவே இது போன்ற பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வு காணமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாப் செய்னுல் ஆப்தீன் கருத்துத் தெரிவிக்கையில், இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்படவேண்டும். எனினும் கொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களை ஒப்படைப்பதென்பது சரியான முடிவல்ல. முதலில் குற்றவாளி யார் என்பதைக் கண்டுபிடிக்கமுடியாது. அப்படிக் கண்டுபிடித்து ஒப்படைப்பதானாலும் அவர்களுடைய உயிர்களுக்கோ, அவர்களது குடும்பத்தினரின் உயிர்களுக்கோ எவ்வித உத்தரவாதமும் இல்லை. உருவாக்கப்பட்டுள்ள சமாதானக் குழு நல்லதொரு முடிவுக்குவந்து, இரு தரப்பிற்கும் நட்டஈடு கொடுத்து பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். எதிர்காலத்தில் இது போன்ற பிரச்சினைகள் தவிர்க்கப்பட வேண்டுமெனில், சீராகவும் நிதானமாகவும் சிந்திக்கும் ஆகர்ஷன மிக்க ஒரு தலைமை முஸ்லிம்களிடையே உருவாக்கப்பட வேண்டும்."

இவை பற்றி இனியாவது முஸ்லிம் சமூகம் சிந்தித்து தமக்கென ஒரு பாதுகாப்பு உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொள்ளுமா...?



04

# மாவனல்லை தாக்குதல் 2001

## இனவாதப் பாசிஸத்தின் இன்னொரு கோர முகம்

மாவனல்லை நகர பஸ்தரிப்பு நிலையத்திலுள்ள C.T.B கடைத்தொகுதியின் 24ம் இலக்கத்தில் அமைந்துள்ள National Bake House இல் இருந்தே மாவனெல்லைக் கலவரம் ஆரம்பித்தது. 2001 ஏப்ரல் 30ம் திகதி இரவு சுமார் 8.45 மணியளவில் மேற்குறிப்பிட்ட ஹோட்டலின் காசாளரான மொஹமட் ஹிஷாம் என்பவர் ஹோட்டலை மூடிவிட்டு வீடு திரும்ப தயாராக விருந்த போது மிலங்கொட என்னும் ஒரு சிங்களக் காடையன் அவரிடம் வந்து நூறு ரூபாய்ப் பணத்தை கப்பமாக கேட்டான். அவர் மறுத்தபோது அவனோடு வந்த மற்றொரு நபரான நந்த என்பவன் ஹிஷாமின் முகத்தில் இருபது ரூபாய்த் தாளை வீசி கோல்ட்லிப் சிகரெட் ஒன்றைக் கேட்டான். கோல்ட்லிப் சிகரெட் தம்மிடம் இல்லையெனவும் பிரிஸ்டல் சிகரெட்டே உள்ளதென்றும் தெரிவித்த போது மிலங்கொட ஒரு சிகரேட் தருமாறு கேட்டுள்ளான். காசாளர் ஹிஷாம் சிகரேட்டையும் மீதிப் பணத்தையும் கொடுத்தபோது மிலங்கொட மிக மோசமான நாகரீகமற்ற வார்த்தைகளால் ஹிஷாமை ஏசியிருக்கின்றான். அவ்விருவரும் அங்கிருந்து சென்று சிறிது நேரத்தின் பின் நந்த, மிலங்கொட ஆகியோரோடு இன்னும் பத்துப் பேரைக் கொண்ட கொலைக்கும்ப

லொன்று ஹோட்டலை நோக்கி வந்தது. அவர்கள் ஹிஷாமையும் அவரது சகோதரர் அஸ்லம் என்பவரையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். மேலும் ஹோட்டலில் தொழில் புரியும் பௌஸுல் அமீர் என்பவரை அக்கும்பல் ஹோட்டலுக்கு வெளியே இழுத்துச் சென்று பஸ் நிலையத்திலிருந்த தூண் ஒன்றில் கட்டிவைத்து கத்தியினாலும் தடியினாலும் பயங்கரமாகத் தாக்கியுள்ளனர். முகம், கை, கால் என்பவற்றையும் கத்தியினால் கீறிக் காயப்படுத்தியுள்ளனர். அப்போது அவ்வின வெறியர்கள் யாராவது உண்மை யான முஸ்லிம் இருந்தால் பௌஸுல் அமீரை காப்பாற்றலாம்" என்று சவால் விடுத்துள்ளனர். இவ்வேளை காசாளர் ஹிஷாம் ஒரு ஆட்டோவில் பொலிஸ் நிலையம் நோக்கி விரைந்து செல்லும் போது இடையில் பொலிஸ் ஜீப்பைக் கண்டு அவர்களை அழைத்து வந்து பௌஸுல் அமீரைக் காப்பாற்றி இருக்கிறார். மிகக் கடுமையர்க காயமடைந்த பௌஸுல் அமீரும் ஹிஷாமும் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

செவ்வாய் 01.05.2001 ஆம் திகதி இச்சம்பவத்தில் தொடர்புடையோரைக் கைது செய்யுமாறு கூறி முஸ்லிம்கள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய் துள்ளனர். எனினும் பொலிஸ் சம்பவத்தை பதிவு செய்ய மறுத்ததோடு இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிஸாரில் அதிகமானோர் மது அருந்திய நிலையில் இருந்திருக்கிறார்கள். சம்பந்தப் பட்டோரை கைது செய்வதற்கு அடுத்த நாள் வரை அவகாசம் கேட்டி ருக்கிறார்கள்.

02 மே 2001 ஆம் திகதி காலை பொலிஸாரின் இத்தகைய பாரா பட்சத்தினால் அதிருப்தி கொண்ட சில முஸ்லிம் இளைஞர்கள் தமக்கெதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரி மாவனெல்லை நகரில் ஒரு அமைதி ஊர்வலத்தை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்து கொண்டிருந்தார்கள். அப்போது சுமார் 1500 பேரைக் கொண்ட சிங்களக் காடையர்கள் கத்தி, தடி, கூரிய ஆயுதங்கள், பெற்றோல் குண்டுகள் சகிதம் நகரில் வந்து குவிந் தனர். அவ்வேளை எவ்வித ஆயுதமும் இல்லாத நிலையில் சுமார் 500 முஸ்லிம்களே அமைதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள அங்கு குழுமியிருந் தார்கள். இவ்விரு சாராருக்குமிடையிலே அதிக பொலிஸ் உத்தியோகத்தர்களும் குழுமி இருந்தனர். நிராயுதபாணிகளான முஸ்லிம்களுக்கும் ஆயுதம் தரித்து நின்ற சிங்களவர்களுக்கும் இடையில் நின்ற பொலிஸார் அப்பாவி முஸ்லிம் களை நோக்கி சுட ஆரம்பித்தார்கள். இதே நேரத்தில் ஆயுதம் தரித்து நின்ற கொலைக்கும்பல் தமது வன்முறைகளைக் கட்டவிழ்க்க ஆரம்பித்தார்கள். 3636 எனும் இலக்கத்தைக் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தரே மாவனெல்லை

நகரிலுள்ள அஜந்தா ஹாட்வெயார் நோக்கி முதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். பின்னர் கொலைக்கும்பலின் அடாவடித்தனங்கள் ஆரம்பிக்கப் பட்டது. நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்கள் பொலிஸாரின் கண்கள் முன்னே தீயிட்டுக் கொளுத்தப்பட்டு சாம்பலாக்கப்பட்டது. பொலிஸாரோ நிராயுதபாணிகளாக நின்ற முஸ்லிம்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தார்கள். இதில் சாலிம் எனும் முஸ்லிம் சுட்டுக் கொல்லப்பட்டார். பலர் பாரிய காயங்களுக்கு உள்ளாகினர். பின்னர் இராணுவப்படை அங்கு சமூகமளித்த பின்னரும் தீவைப்புச் சம்பவங்களும் தாக்குதல்களும் தொடர்ந்தன. ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னரும் பொலிஸாரின் ஆதரவுடனான இக் கொலைக் கும்பலின் இனவெறித்தாக்குதல்கள் இடம்பெற்றன.

## முஸ்லிம்களின் ஆன்மாவைச் சுட்ட அகோர நிகழ்வு

ஏப்ரல் 30ம் திகதியும் மே 1ம் திகதியும் மாவனல்லை நகரில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக அப்பகுதி பதற்ற நிலைமைக்குள்ளாகி இருந்தது. மே 2ம் திகதி புதன்கிழமை காலை கனேதென்னக் கிராமக் கடைவீதியில் அப்பகுதிப் பேரினவாதிகள் அசம்பாவிதங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந் தனர். பின்னர் கனேதென்னப் பகுதிக்கு அப்பாலுள்ள மஹன்தேகம, பகல கடுகண்ணாவ, மாகடவ பகுதியிலிருந்து சிங்கள இளைஞர்கள் முச்சக்கர வண்டிகள் மூலமும், ட்ரெக் வண்டிகள் மூலமும், பஸ்கள் மூலமும் அனுப் பப்பட்டனர்.

பிற்பகல் 12 மணியளவில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்த போது மேற்குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து வந்த சிங்களவர்களுக்கு மாவனல்லை பஸ் தரிப்பு நிலையத்துக்குச் செல்ல முடியவில்லை. எனவே, அவர்கள் அங்கிருந்து கொண்டே தமது காடைத்தனங்களை கட்டவிழ்த்து விட ஆரம்பித்தனர்.

அக்காடையர் கூட்டம் நகர சபைக்கு முன்னாலிருந்த `சேப்வே' ஆடைக் கைத்தொழிற்சாலை மற்றும் ராலியா திருமண மண்டபம் அருகி லிருந்த மினி சுப்பர் மார்கட்டையும் தீயிட்டுக் கொளுத்திய பின் கனே தன்னப் பாலத்தை கடந்து வந்தனர். அப்போது அவர்களின் கண்ணில் முதலில் பட்டது கனேதென்ன தக்கியாவாகும். அதன் முற்பகுதி தொழுகைக் குரிய இடமாகவும் நடுப்பகுதி ஸியாரமாகவும் அடுத்த பகுதி வாசிகசாலையாக வும் இருந்தது. அந்நேரத்தில் அங்கு கடமை புரிபவர் ஸியாரத்தின் முன் கதவுகளையும் வாசிகசாலையையும் மூடிவிட்டுச் சென்றிருந்தார். திறந்து

கிடந்த தொழும் பகுதியில் நுழைந்த காடையர்கள் ஜன்னல்களைத் தகர்த்து பாய்களையும் முஸல்லாக்களையும் குர்ஆன்களையும் ஒன்றாகக் குவித்து நெருப்பு வைத்தனர். பின்னர் மூடப்பட்டிருந்த ஸியாரத் கதவுகள் உடைக்கப்பட்டு ஸியாரமும் இரும்புக் கம்பிகளால் தாக்கப்பட்டது. காணிக்கை உண்டியல் உடைத்துத் திறக்கப்பட்டு சில்லறை நாணயங்கள் எல்லா இடங்களிலும் வீசப்பட்டுக் கிடந்தன. அடுத்து அங்கிருந்த வாசிகசாலை சேதமாக்கப்பட்டு அங்குள்ள சகல பொருட்களும் ஒன்று குவிக்கப்பட்டுத் தீவைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து முஸ்லிம் வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு வந்த காடையர் கூட்டம் ஜும்ஆப் பள்ளி யைத் தாக்க முற்பட்டார்கள். அப்போது அங்கே கடமையாற்றிக் கொண்டிருந்த அல் ஹாபில் எம்.ஏ.எம். நஸார் என்பவர் இதுபற்றி விளக்கமளிக்கையில், நாம் பகல் வேளையில் உணவு பரிமாறிக் கொண்டிருந்தோம். என்னோடு முஅத்தின் எம்.டிஎம். பளீல், உதவியாளர் அப்துல்லாஹ் என்பவரோடு குர்ஆன் வியாபாரியான களுத்துறையைச் சேர்ந்த யூஸுப் என்பவரும் இருந்தார். காடையர்களின் சப்தமும் அவர்களின் கூச்சல்களும் அவர்கள் வீடுகளின் கண்ணாடிகளை உடைக்கும் சப்தமும் எமக்குக் கேட்டன. இருந்தும் பள்ளிவாசலுக்கு வரமாட்டார்கள் என்று நாம் உறுதியோடு இருந்தோம். சிறிது நேரத்தில் பள்ளி ஜன்னல்கள் கற்களாலும் போத்தல்களாலும் தாக்கப்படுவதை அறிந்து கொண்டோம். அடுத்த நிமிடம் சுமார் ஐம்பது அறுபது பேர் அளவில் பள்ளிக்குள் நுழைந்து விட்டார்கள்.

பள்ளியிலுள்ள ரெஸ்டிமார்களின் காரியாலய அறைக்கதவு உடைக்கப்பட்டது. அதன் தளபாடங்களும் நொறுக்கப்பட்டன. பள்ளிக்குள் இருந்த மின்விளக்குகள் உடைக்கப்பட்டன. அவர்களது கைகளிலிருந்த தடிகளாலும் இரும்புக் கம்பிகளாலும் ஒலிபெருக்கியின் அம்பலிபயர்களை உடைத்தார்கள். நாம் இருக்கும் அறையின் கதவை அவசரமாக மூடிப் பூட்டுப் போட்டுக் கொண்டோம். அவர்கள் அலவாங்குகளால் கதவை உடைத்தார்கள். கதவுக்குள்ளால் வந்த அலவாங்கு அப்துல்லாஹ் என்பவரின் காலைக் காயமாக்கியதால் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. கதவு திறபட்டதும் முதலிலே அவர்களுக்கு முன்பாக நான் தான் இருந்தேன். தடியால் என் முகத்தைத் தாக்கினார்கள். உதடுகள் தகர்ந்து இரத்தம் கொட்டியது. இன்னும் ஓரிரு அடிகள் கழுத்தையும் வயிற்றுப் பக்கத்தையும் கால்களையும் தாக்கின. பொறுக்க முடியாத அடிகளுக்கு மத்தியில், தடிகளால் தாக்கப்பட்டுக் கொண்டிருந்த முஅத்தினை ஒடத்தப்பும்படி கத்திக் கொண்டே நான் தப்பியோடினேன். ஓடிப்போய் பக்கத்திலுள்ள பௌத்த வீடொன்றில் தான் ஒளிந்து கொண்டேன். சுமார்

நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு மேல் பள்ளிவாயலில் தமது வெறியாட்டத்தை நடாத்திவிட்டு அவர்கள் போகும்வரை பார்த்துக் கொண்டிருந்தேன். பின்பு பள்ளிக்கு வந்து, எனது அறையிலுள்ள சாமான்களும் அலுமாரிகளும் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அதிலிருந்த குர்ஆன்கள், புத்தகங்கள் அனைத்துமே எரிந்து சாம்பலாகி இருந்தன. எனது அடையாள அட்டை உட்பட உடைகள் அனைத்தும் கருகி இருந்தன. லீவில் சென்றிருந்த மௌலவி தங்கும் அறையும் உடைக்கப்பட்டு, அதுவும் தீயிடப்பட்டிருந்தது.

உட்பள்ளியிலே பாய்களையும் முஸல்லாக்களையும் குர்ஆன்களையும் ஒன்றாகக் குவித்து பெற்றோல் குண்டு அடித்திருக்க வேண்டும். அதற்கு மேல் டயர்களையும் போட்டிருந்தார்கள். அங்கிருந்து கிளம்பிய அனலும் புகையும் எனது கண்களை மூடி மறைத்தன. புகை மண்டலம் மாத்திரமே எனக்குத் தென்பட்டது. கண்களைத் திறந்து பார்க்க முடியவில்லை. காரியாலய அறைகளிலுள்ள பொருட்களையெல்லாம் குவித்து அதன்மேல் டயர்களைப் போட்டு எரித்திருக்கிறார்கள். என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. அழவும் முடியாமல் கத்தவும் முடியாமல் தள்ளாடினேன். சுவரைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தேன். எனது உடுத்த உடையைத் தவிர வேறெதுவுமே இருக்கவில்லை'' இப்படி அழுதவாறே அவர் கூறி முடித்தார்.

பள்ளிக்குள் இருந்த அலுமினியப் பாத்திரங்கள் எல்லாம் பாவிக்க முடியாதளவுக்குச் சேதப்படுத்தப்பட்டு வெளியே வீசப்பட்டிருந்தன. பள்ளியின் சுவர்கள் கருமையாகவும் வெடிப்புக்கள் நிறைந்ததாகவும் காட்சியளித்துக் கொண்டிருந்தன. இரண்டு நாட்கள் கழிந்து வெள்ளிக்கிழமை ஜும்மா அன்று கூட புகை வந்து கொண்டிருப்பதை மக்கள் கண்டனர்.

பள்ளிக்கு முன் வீட்டிலிருந்த ஜனாப், ஐ.எம். ஐயுப்கான் எனும் இளைஞன் இதுபற்றிக் கூறும் போது, ``பள்ளிக்குள் ஒரு கூட்டம் தமது வெறியாட்டத்தைச் செய்யும் போது வெளியிலிருந்த மறுகூட்டம் கோஷமிட்டுக் கொண்டும் அசிங்கமான வார்த்தைகளைக் கூறிக்கொண்டும் இனத்துவேஷ வார்த்தைகளைக் கூறியும் கோஷமிட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் போகும் வரை மறைந்து பார்த்துக் கொண்டிருந்து விட்டு பள்ளிக்குள் கொளுந்து விட்டெரியும் நெருப்பை அணைப்பதற்காக ஓடினேன். என்னைக் கண்ட சில காடையர்கள் கத்திக் கொண்டு தாக்க முற்பட்டனர். நான் பள்ளிக்குப் பின்னால் ஓடி விட்டேன்'' என்று கூறினார்.

பள்ளிவாசல் தாக்கப்படும் போது இரண்டு ஹெலிகப்டர்கள் மேலால் சுற்றிக் கொண்டிருப்பதைப் பலரும் கண்டனர். இவர்களாவது இக்கொடுமைக் காரர்களை விரட்டியடிப்பார்கள் என எதிர்பார்த்தனர். ஆனால், எதுவுமே நடக்கவில்லை. ஊரடங்குச் சட்ட நேரத்தில் ஆயுதங்களுடன் வன்செயல்கள் புரியும் இவர்களை ஏன் மேலே செல்லும் ஹெலிகப்டர்களில் உள்ளவர்களுக் குத் தெரியவில்லையா? அவர்களால் எதுவுமே செய்ய முடியாதா? ஏன் இவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிஸ் வாகனம் கூட பின்தொடர்ந்து வந்துள்ளது. வெளியே வரும் முஸ்லிம் இளைஞர்களை மாத்திரம் விரட்டிவிட்டு வன்செயல் புரிவோருக்குப் பாதுகாப்புக் கொடுத்திருக் கிறார்கள். சட்டத்தையும் ஒழுங்கையும் இவர்கள் எப்படி நிலைநாட்டுகிறார்கள்? என மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

## பலியானவர்களின் மனக்குமுறல்கள்

மாவனல்லை நகர பெற்றோல் செட் உரிமையாளர் இக்பால் தனது நிரப்பு நிலையம் தாக்கப்பட்டது குறித்து பின்வருமாறு விவரித்தார் :

*02.05.2001ம் திகதி காலை 11.00மணிக்கெல்லாம் பெட்ரோல் செட்டை மூடிவிட்டு பின்னாலுள்ள எனது வீட்டுக்குச் சென்றேன். காலை 11.45 மணி சுமார் 50 சிங்களவர்கள் பெட்ரோல் செட்டையும் மினி மார்கட்டையும் உடைக்க ஆரம்பித்தார். இந்தச் சம்பவத்தை என்னுடைய வீட்டிலிருந்து நான் பார்த்துக் கொண்டிருந்தேன். வீட்டில் எனது மனைவி மக்கள் எல் லோரும் இருந்தார்கள். இந்தக் கூட்டத்தைத் தடுக்கும் சக்தியும் எனக்கு இருக்கவில்லை. எனவே நாம் உடனடியாக வீட்டின் பின்புறம் காட்டு வழியாக எனது சிங்கள நண்பர் ஒருவரின் வீட்டில் தஞ்சம் புகுந்தோம். அங்கே இருந்து கொண்டு எனது பெற்றோல் செட்டைப் பார்க்க முடிந் தது. சுமார் 12 மணியளவில் மீண்டும் ஒரு கூட்டம் வந்து அனைத்தையும் உடைத்ததோடு நெருப்பு மூட்டினார்கள். பெற்றோல் செட் முழுவதும் முற்றிலும் எறிந்து நாசமானது.*

*மதியம் சுமார் 3.00 மணியளவில் என்னுடைய நண்பர்கள் வந்து எம்மை அழைத்துச் சென்றார்கள். என்னுடைய உறவினர் வீட்டில் சென்று நான் தங்கினேன். ரூபா 90 லட்சம் வரை நஷ்டமேற்பட்டுள்ளது. என்னுடைய வீட்டையும் கண்ணாடியை உடைத்து நெருப்பிட்டுக் கொளுத்த முயன்றனர். ஆனால் உறவினர்களும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் வந்து தீயை*

அணைத்தார்கள். இல்லையென்றால் வீடும் முழுவதுமாக எறிந்திருக்கும். என்னுடைய பெற்றோல் செட்டை திட்டமிட்டே சிங்களவர்கள் எறித்துத் தரைமட்டமாக்கினார்கள். பக்கத்திலுள்ள சிங்களவர்களுக்குச் சொந்தமான கடைகளெல்லாம் பாதுகாப்பாக அப்படியே இருக்கின்றன.

மாவனெல்லையில் இதற்கு முன்னர் சிங்கள, முஸ்லிம் சமூகத்துக்கிடையே சிறு சிறு சலசலப்புக்கள் வந்ததுண்டு. ஆனால் இந்தளவு பெரிய இழப்பை முஸ்லிம்கள் சந்தித்ததில்லை. நான் கனவிலும் இப்படி நடக்குமென்று நினைக்கவுமில்லை. சிங்கள இனவெறியர்களின் திட்டம் பெரும்பாலும் முஸ்லிம்களின் பொருளாதாரத்தைத் தரைமட்டமாக்குவதே. அவர்கள் முஸ் லிம்களைக் கொல்வதைவிட அதிக கவனம் எடுத்துக் கொண்டது பெரிய கடைகளை சூரையாடி எரிப்பதிலுமே. பெற்றோல் செட், வீட்டில் ஏற்ப டுத்தப்பட்ட சேதம் அனைத்தையும் புள்ளிவிபரத்தோடு மதிப்பிட்டு பட்டியல் தயாரித்துள்ளேன். இதனை அரசாங்கத்திடம் முன்வைப்பேன். சந்திரிக்கா அரசு எங்களுடைய இழப்புக்கு முழுமையாக நிவாரணம் வழங்குமென்று நம்புகிறேன்.

சம்பவத்தில் நேரடியாகத் தொடர்புபட்ட ஹோட்டல் காசாளர் ஹிஷாம் கல வரம் குறித்து இப்படி விபரித்தார் :

கடந்த ஏப்ரல் முப்பதாம் திகதி திங்கட்கிழமை இரவு எட்டு முப்பது மணிக்கு என்னுடைய கடைக்கு பிரதான எம்பி ஒருவரின் கையாட்கள் சிலர் வந்தார்கள். முதலில் இரண்டு பேர் தான் வந்தனர். வந்தவர்களில் ஒருவர் இருபது ரூபாவைத் தந்து சிகரேட் கேட்டான். நான் சிகரேட்டையும் மீதி சில்லறையையும் கொடுத்தேன். அப்போது என்னை ஏசத் தொடங்கினார். நிலாங்கொட, வஜிர, பியாந்த போன்றவர்கள் என்னிடம் கப்பம் கேட்டார்கள். நான் தரமுடியாது என்று சொன்னேன். அப்போது என்னைக் கடையை விட்டு வெளியே வா என்று கூப்பிட்டான்.

நான் கேஷ் டிராயரை மூடிவிட்டு கடைக்கு வெளியே வந்தேன். என் கடையில் வேலை செய்து கொண்டிருந்த பௌஸுல் அமீர் என்பவரும் எனக்கருகில் வந்தார். பக்கத்துக் கடையில் இருந்து சகோதரன் ஸலாம் அவர்களும் என்னை நோக்கி வந்தார்கள். இதற்கிடையில் மீண்டும் அந்தக் கப்பம் வசூலிக்கும் கூட்டத்தினர் என்னைத் திட்டினார்கள். பௌஸுல் அமீர் என்ன ஏதுவென்று என்னிடம் விசாரித்துக் கொண்டிருக்கும் போதே அவரை அடிக்கத் தொடங்கி விட்டார்கள்.

நான் இடையில் புகுந்து பௌஸுல் அமீரைப் பாதுகாக்க அவர்களை அடித்து விரட்டினேன். அப்போது என்னை அவர்கள் உருட்டிக் கட்டையால் காலிலும், முகத்திலும் தாக்கினார்கள். காலில் காயம் ஏற்பட்டதோடு, பல் ஒன்றும் விழுந்தது. பியாந்த என்பவன் என்னிடம் சமாதானம் பேசுவது போன்று நடித்தான். அவன் குழப்பம் நடக்கும் போது கடைசியாகத் தான் வந்தான். நான் பௌஸுல் அமீரிடம் ``இங்கே நிற்காதே. அடிபடாமல் வீட்டுக்கு விரைவாகச் சென்றுவிடு`` என்று சொன்னேன். ஆனால் அவர் வீட்டுக்குச் செல்லாமல் வேறெங்கோ சென்றதைக் குழப்பக்காரர்கள் கண்டு கொண்டார்கள்.


ஷஹீதாக்கப்பட்ட சாலி

கூட்டமாகச் சென்று அவரைப் பிடித்து சேட்டைக் கழற்றி அவரைத் தூணில் கட்டி சைக்கிள் சைன், கத்தி, தடி போன்றவற்றால் அரை மணி நேரமாகத் தாக்கினார்கள். அவருடைய முகம் கிழிந்து முதுகுப் பகுதி முழுவதும் சைன் பட்ட காயங்கள் தென்பட்டன. இந்நேரம் சிங்களவர்கள் எத்தனையோ பேர் இருந்தும் யாரும் உதவிக்கு வர வில்லை. அந்த நேரம் மழையும் தூரிக் கொண்டிருந்தது. இரவான தால் முஸ்லிம்கள் யாரும் அங்கி ருக்கவில்லை. பௌஸுல் அமீரை அடித்து இழுத்து வந்த அவர்கள் என்னைப் பார்த்து ``உண்மையான முஸ்லிம் யாராவது இருந்தால் இவ னைக் காப்பாற்றுங்கள் பார்ப்போம்`` என்று கத்தினார்கள். என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவரைக் காப்பாற்றுங்கள் என்று கத்தினேன். எனினும் அங்கே எந்தவொரு முஸ்லிமும் இருக்கவில்லை. ஆனால் அங்கிருந்த சிங்களப் பொலிஸாரோ சிலை போன்றிருந்தார்கள்.

உடனே ஒரு ஆட்டோவில் ஏறி பொலிஸ் ஸ்டேசனை நோக்கி நான் விரைந்தேன். நான் சென்று கொண்டிருக்கும் போது முன்னால் பொலிஸார் வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் விஷயத்தைச் சொல்லி

அழைத்து வந்து பௌஸுல் அமீரைக் காப்பாற்றினேன். பின்னர் நானும் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டேன். பௌஸுல் அமீரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு முகத்தில் மட்டும் ஆறு தையல் போட்டார்கள்.

பிரச்சினை நடந்து ஆறு நாட்களாகியும் என்னைத் தாக்கியவர்களையோ பிரச்சினைக்குக் காரணமானவர்களையோ இன்று வரை பொலிஸார் கைது செய்யவில்லை. மாவனல்லையில் முஸ்லிம்கள் இப்பிரச்சினைக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று பொலிஸாரிடம் வேண்டினார்கள். ஆனால் அவர்களோ பெரும்பான்மை இனத்துக்கே சார்பாக நடந்து கொண்டார்கள்.

பொலிஸாரிடம் நியாயம் கேட்டுக் கொண்டிருந்த போது சிங்கள இளைஞர்கள் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் வந்து எங்களைத் தாக்கத் தொடங்கினார்கள். பொலிஸாரும் சிங்கள இனவாதிகளோடு சேர்ந்து கொண்டு அவர்களுக்குப் பாதுகாப்பாக துப்பாக்கியால் எங்களைச் சுட ஆரம்பித்தார்கள். முஸ்லிம்களின் அனைத்து இழப்புக்கும் மாவனல்லை பொலிஸாரே காரணம். ஆரம்பத்திலிருந்தே பொலிஸார் நீதமாக நடந்திருந்தால் இந்தக் கலவரமே நடந்திருக்காது.

பத்திரிகைகளில் இரண்டு பொலிஸார் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று செய்தி வந்தது. அவ்விரு பொலிஸாரும் ஆரம்பத்தில் நானும் பௌஸுல் அமீரும் தாக்கப்படும் போது வேடிக்கை பார்த்தவர்களே. ஆனால் கலவரத்தின் போது முஸ்லிம்களை மட்டும் எதிரியாகக் கருதி துப்பாக்கி தூக்கிய பொலிஸார், முஸ்லிம் ஒருவர் கொல்லப்படவும், நாற்பது முஸ்லிம்கள் துப்பாக்கிச் சூடுபடவும் காரணமான சிங்களப் பொலிஸார் இன்னும் கைது செய்யப்படவும் இல்லை. தண்டனை பெறவும் இல்லை. பொலிஸாரின் கண்மூடித்தனமான, துவேஷமிக்க இந்தப் போக்குக்கு இடைநீக்கமோ இடமாற்றமோ தீர்வாகாது என்பது மட்டும் உண்மை. என்னுடைய கடையையும் சிங்கள இனவாதிகள் நெருப்பு வைத்துக் கொளுத்தி விட்டார்கள்.

சம்பவத்தில் தொடர்புற்ற மற்றொரு நபரே பார்ஹான் (41), வன்முறையின் கொடூரம் குறித்து அவர் வெளியிட்ட கருத்து :

நான் சம்பவம் நடந்த அன்று மாவனல்லையில் தான் இருந்தேன். உண்மையில் அன்றைய கலவர நிலை எனக்கு பலஸ்தீனத்தையே நினைவுபடுத்தியது. சிங்களவர்கள் கூட்டமாக வந்து, சிங்கள பொலிஸையும் முன்னிறுத்திக்

கொண்டு, முஸ்லிம்களின் கடைகளை எரித்து முஸ்லிம்களைத் தாக்கி வந்தார்கள். தாறுமாறான இந்தத் தாக்குதலின்போது சுமார் 500 முஸ்லிம் இளைஞர்கள் எந்த ஆயுதமுமின்றி சிங்கள இனவெறியர்களைத் திருப்பித் தாக்கினார்கள்.

முஸ்லிம்களிடம் எந்த ஆயுதமும் இருக்கவில்லை. கற்கள் மாத்திரமே கையெறி குண்டுகளாக உபயோகிக்கப்பட்டது. அத்துடன் பலஸ்தீனர்கள் பயன்படுத்துவதைப் போன்றே சட்டையில் கல் வைத்துக் குறிபார்த்து எரிந்தார்கள். சிங்களப் பொலிஸ் முஸ்லிம்களை நோக்கி கண்ணீர்ப்புகை, ரப்பர் புல்லட் எதுவும் முன்னெச்சரிக்கையாக எரியாமல் நேரடியாகவே சுடத் துவங்கினார்கள்.

முஸ்லிம் இளைஞர்கள் பின்வாங்கவும் இல்லை. சிதறி ஓடவுமில்லை. நெஞ்சு நிமிர்த்தி முன் சென்ற இளைஞர்களைப் பார்த்து சிங்களப் பொலிஸ் நிலை குலைந்து போனது. இதனைக் கண்ணுற்ற சிங்களப் பொலிஸார் இப்படிக் கூறியிருக்கிறார்கள். ``ஜப்னாவில் கூட நாங்கள் இது போன்றவர்களைச் சந்தித்ததில்லை`` என்று.

கலவரம் செய்பவர்களை கால் பகுதியிலே தான் சுடப் பட வேண்டும் என்ற விதி எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டிருந்தது. முஸ்லிம் இளைஞர்கள் கூட்டம் மாவனல்லை டவுன் பகுதியைப் பாதுகாத்து நின்றதாலே முஸ்லிம்களின் பெரும்பாலான கடைகள் பாதுகாக்கப்பட்டன. இல்லையேல் மிகப்பெரிய சேதம் ஒன்று ஏற்பட்டிருக்கும். அதே நேரம் இளைஞர்கள் பெரும்பாலும் இங்கே திரண்டிருந்ததைப் பயன்படுத்தி ஒதுக்குப் புறமாக இருந்த முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், பள்ளி வாயில்கள், ரப்பர் பெக்டரி, காமன்ட் போன்றவைகள் எரித்தும் உடைத்தும் நாசம் செய்யப்பட்டது.

மாவனல்லையில் 02.05.2001 அன்று சிங்களவர்களால் முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்பட்ட நஷ்டம் 50 கோடியாகும். முஸ்லிம்களைச் சுட்டதும், முஸ்லிம்களின் வீடுகளின் கடைகளின் கண்ணாடிகளை உடைத்ததும் சிங்களப் பொலிஸாரே. பொலிஸ் சூடுபட்டு ஒரு முஸ்லிம் உயிர் இழந்து விட்டார். வறகாப்பொலயைச் சேர்ந்த சாலிம் என்ற பெரிய மனிதரே அவர். சுமார் 40க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் காயமடைந்துள்ளனர். ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில்.

பிரச்சினை ஆரம்பமான இடத்தில் பிரச்சினையைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்த இரு பொலிஸாரும் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது உண்மை.



பள்ளிவாசலினுள் தீயில் எரிக்கப்பட்ட முஸ்ஹப்கள்



நகரில் எரித்து நாசமாக்கப்பட்ட கடைத்தொகுதி

ஆனால் கலவரத்தின் போது முஸ்லிம்களைச் சுட்ட, கடைக்கண்ணாடிகளை உடைத்த பொலிஸ் மீது இன்று வரை (05.05.2001) எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அஜந்தா ஹார்ட்வெயாரும் தாக்கப்பட்டுள்ளது. மாவனல் லையிலிருந்து கடுகண்ணாவ வரைக்கும் பாதையோரங்களிலிருந்த முஸ்லிம்களின் வீடுகளும் தாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களுக்குச் சொந்தமான இரண்டு பெரிய காமன்ட்களும் இவர்களால் எரிக்கப்பட்டுள்ளன. அங்கே வேலை பார்ப்பவர்கள் அனைவருமே சிங்களவர்கள். வேலை செய்து கொண்டிருந்த சில சிங்களப் பெண்கள் ``எங்களையும் சேர்த்து உள்ளே போட்டு எரித்து விடுங்கள்`` என்று கூறி இருக்கிறார்கள். அந்தளவு இனவெறியர்கள் மீது அவர்களது சமூகத்துக்கே வெறுப்பு. கலவரம் நடந்த தினம் திட்டமிட்டு தண்ணீர் மின்சாரம், தொலைபேசி தொடர்புகள் எல்லாமே கட் பண்ணப் பட்டிருந்தது.

சம்பவத்தில் கிரனைட் வீசப்பட்டு காயத்துக்குள்ளான அஸ்மி என்பவரின் வாக்கு மூலம் :

நான் பொலிஸால் சுடப்பட்டு நெஞ்சுப் பகுதியிலும் காலிலும் காயப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று இன்று தான் (05.05.01) வீடு வந்தேன். பிரச்சினையின் முதல்நாளன்று தூணில் கட்டப்பட்டு கடுமையாக சித்திரவதை செய்யப்பட்ட பௌஸூல் அமீர் என்பவரும் என்னோடு தான் மருத்துவ மனையில் தங்கியிருந்தார். நாலு நாட்களுக்குப் பிறகு நேற்றுத்தான் வாய் திறந்து பேசினார். எந்த நியாயமுமில்லாமல் கப்பம் வசூலிக்கும் குழுவொன்று பௌஸூல் அமீரை தாக்கியுள்ளது. அக்குழுவை கைது செய்வதாக வாக்களித்த பொலிஸ் அதனைச் செய்யத் தவறியதால் முஸ்லிம்கள் பொலிஸாரிடம் நியாயம் கேட்டு கோஷம் எழுப்பிய போது சம்பந்தமே இல்லாமல் சிங் களவர்கள் சுமார் 2000 பேர் பொலிஸாருக்குப் பின்னால் நின்று கொண்டு முஸ்லிம்களைத் தரக்குறைவாகப் பேசவும் கல்லெறிந்து தாக்கவும் தொடங்கினர். இதில் முன்னணியில் நின்று முஸ்லிம்களைத் தாக்கியவர்கள் முன்னரே முஸ்லிம்களை இழிவுபடுத்தி வந்த ஒரு அரசியல்வாதியின் கைத் தடிகள் சிலரே. இரு புறமும் அவர்கள் கல்லெறியத் தொடங்கினார்கள்.

இந்த நேரத்தில் நான் வீட்டுக்குச் செல்வதற்காக வந்துகொண்டிருந்தேன். வரும் பாதையில் முஸ்லிம்களில் சிலர் பொலிஸார் தங்களுக்கு நியாயம் வழங்கவில்லை என்பதைத் தெரிவிக்க பதாகைகளைத் தயார்செய்து கொண்டி ருந்தார்கள். அந்த இடத்திற்கு அருகில் சிங்கள இளைஞர்கள் சிலர் வந்து முஸ்லிம்களை நோக்கி கல்லெறியச் தொடங்கினார்கள். பொலிஸார் எங்களை நோக்கி சுட ஆரம்பித்தார்கள். எனக்குப் பக்கத்தில் கிரனேட் ஒன்று எறி யப்பட்டு வெடித்துச் சிதறியது. அதனால் நான் காயமடைந்தேன்.

## திட்டமிடப்பட்ட தாக்குதல்

மாவனல்லையில் சிங்கள இனவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் தற்செயலாக நேர்ந்ததன்று. மாறாக இது கடந்த பல வருடங்களாக, இப்பிரதேச முஸ்லிம்களின் பொருளாதார வளங்களை அழித்தொழிப்பதன் மூலம் அவர்களைப் பின்னடையச் செய்யும் நோக்கில் மிகுந்த கவனத்தோடு முன்கூட்டியே திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மக்கள் அளித்த வாக்குமூல சான்றுகள் வருமாறு.

* நீண்ட காலமாகவே முஸ்லிம்களைத் தாக்குவதற்கான தருணம் பார்த்து அவர்களைச் சீண்டி வந்தமை.
* சில முஸ்லிம் யுவதிகளை சிங்கள இளைஞர்கள் காதலித்துத் திருமணம் முடித்தமை.
* இந்நடவடிக்கைகளுக்கு ``பௌத்த பல மண்டலய`` நிதியுதவி வழங்கி வந்தமை.
* கடந்த வருடம் முஸ்லிம் கடைகளில் பொருட்களை வாங்க வேண்டாம் போன்ற துண்டுப் பிரசுரங்களை இவர்கள் வெளியிட்டு வந்தமை.
* ஏற்கனவே திட்டமிடப்பட்டது போன்று தயார் நிலையிலிருந்த சிங்கள இளைஞர்கள் தாக்குதலுக்கு வாகனங்கள் மூலம் நகருக்குக் கொண்டு வரப்பட்டமை.
* சம்பவ தினத்தன்று இரவு சுமார் 75 பேருக்கு பாதுகாப்புப்படை உயர் அதிகாரி ஒருவரின் வீட்டில் இக்கும்பலுக்கு இராப்போசனம் வழங்கப்பட்டமை.

இதேபோன்று பல காரணங்கள் இதுவொரு திட்டமிட்ட தாக்குதல் என்பதைக் காட்டுகின்றன.

## இன வன்முறையின் சூத்திரதாரிகள்

ஒரு உயிரைப் பலியெடுத்து, பெருந்தொகையானோருக்குக் காயங்களை ஏற்படுத்தி அதிகளவு சொத்துக்களை சேதப்படுத்திய மாவனல்லை சம்பவம் தனியார் பிரச்சினை ஒன்றின் காரணமாக ஏற்பட்டது என அரச ஊடகத்துறை படம் காண்பிப்பதற்கு முயற்சிக்கிறது. உண்மையில் கிராமிய

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மஹீபால ஹேரத் அவர்களது ஆதரவைப் பெற்றுள்ள கொலைக் கும்பல் ஒன்று மாவனல்லை நகரிலுள்ள கடைகளில் கப்பம் பெற்றதும், கப்பம் பெறுவோருக்கு எதிராக பொலிசில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் அரசியல் பலத்தால் மூடி மறைக்கப்பட்டு கப்பம் பெறுவோருக்கு எதிராக செயற்பட்டோரைத் தாக்கி சொத்துக்களை சேதப்படுத்தியதுமே காரணம் என தற்போது தெரியவந்துள்ளது. கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி இரவு 09.30 மணியளவில் அமைச்சர் மஹீபால ஹேரத்தின் முக்கிய ஆதரவாளர்களான பிரியந்த, சமன், மில்லகொட ஆகியோர் உள்ளடங்கலான கொலைக்கும்பல் மாவனல்லை பஸ்தரிப்பிடத்துக்கு அண்மையில் உள்ள ஸாஹிரா ஹோட்டலுக்குள் நுழைந்து காசாளரிடம் கப்பம் கேட்டுள்ளார்.

காசாளரான முஸ்லிம் இளைஞர் கப்பம் செலுத்த மறுத்த போது கொலைக் கும்பல் அந்த இளைஞனைத் தாக்கி, பின்னர் அவனை ஹோட்டலுக்கு வெளியில் இழுத்துச் சென்று பஸ்தரிப்பிடத்தில் நிறுவப்பட்டுள்ள பிரேமதாஸ சிலையில் வைத்துக் கட்டிக் கடுமையாகத் தாக்கியதோடு கத்தியால் வயிற்றைக் கிழித்துள்ளது. அமைச்சரது ஆதரவாளர்களான இந்தக் கொலைக் கும்பல் அப்பிரதேசத்தின் பல வன்முறைகளுக்காகக் குற்றம்சாட்டப்பட்டும் பொலிசின் ஆதரவில் சுதந்திரமாக நடமாடுவதாகத் தெரியவந்துள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பாக மாவனல்லைப் பொலிசுக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் கூட சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு பொலிசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் தாக்குதலுக்குற்பட்ட இளைஞனது சாரார் பொலிசாருக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அப்போது குற்றம் சாட்டப்பட்டுள்ள ப்ரியந்த என்பவனின் மூத்த சகோதரனான பாலித என்பவன் ஆர்ப்பாட்டத்தில் தலையிட்டு ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்க ஆரம்பித்ததோடு, இறுதியாக அது இருசாரார்களுக்கிடையிலான கடும் மோதலாக பரிணாமம் எடுத்துள்ளது.

பொலிசார் ஆரம்பத்தில் அமைதியான போக்கைக் கையாண்டு மோதல் உக்கிரமடைவதற்கு இடமளித்ததாகவும், இறுதியில் கண்ணீர்ப்புகை பயன்படுத்தியும் துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகத்தாலும் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கியதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர். அதில் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஹிங்குலை எனும் இடத்தில் இருந்து வேறொரு வேலைக்காக வந்த மொஹம்மட் ஹனீபா என்ற 55 வயது நபரொருவர் மரணித்ததோடு இன்னும் பெருந்தொகையானோருக்கு காயமேற்பட்டுள்ளது. இத்தாக்குதலில் பாலித என்பவனது குழு பெட்ரோல்

குண்டுகளைப் பயன்படுத்தியதோடு அவனைப் பாதுகாக்கப் பொலிசாரும் முன்வந்துள்ளனர். இச் சந்தர்ப்பத்தில் அடுத்த தரப்பினர் பொலிஸ் ஜீப் வண்டி ஒன்றுக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

சம்பவத்தில் தொடர்புபட்ட பாலித என்பவன் மஹீபால அமைச்சரது நெருங்கிய ஆதரவாளர் என்பதால் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களைக் கைது செய்வதற்குப் பொலிசார் நடவடிக்கை எடுக்காது என்பது தாக்குதலுக் குற்பட்ட தரப்பினரது கருத்தாகும். அவ்வாறே சம்பவத்தின் மூல காரணத்தை மூடிமறைத்து அதை சிங்கள, முஸ்லிம் இனவாத மோதலாகக் காட்டுவதற்குப் பெரும்பாலான அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் அவர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

**நன்றி ராவய** 06-05-2001

ஏப்ரல் 30ம் திகதி இரவு 6.45 மணியளவில் நஷனல் ஹோட்டலில் ஏற்பட்ட வாக்குவாதமே பிரச்சினைக்கு வித்திட்டது. இதன் பின்னணியாக மே மாதம் 2ம் திகதியன்று முழு மாவனல்லை நகரமும் யுத்தகளமாக மாறியிருந்தது. அப்பிரதேச சர்வதிகாரிகள் இதை ஒரு இனக்கலவரமாகக் காட்ட முயன்றும் அது வெற்றியளிக்கவில்லை. மின்கம்பத்தில் கட்டி வாயை வெட்டிய சம்பவம் 30ம் திகதி இரவே மாவனல்லைப் பொலிஸ் பதிவேடுகளில் பதியப்பட்டு விட்டன. எனினும் அரசியல் சர்வாதிகாரியினரே கொலைக்காடையர்களின் பொம்மைகளான பொலிஸார் வாயை வெட்டிய கொலையாளிகளைக் கைது செய்யவில்லை. இதனால் கோபமுற்ற நகரவாசிகள் பொலிஸுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடாத்தினர். ``கொலைக்குழுக்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். இரு சாரார் இடையிலும் சமாதானத்தைப் பேணுங்கள்`` இச்சுலோகங்களைத் தாங்கிய பெனர்களுடன் அவர்கள் கோஷமிட்டனர். கொலைக் கும்பலைக் கைது செய்யுமாறு வற்புறுத்தினர். இதன்போது வாய்த்தர்க்கங்கள் ஏற்பட்டு ஏச்சுப்பேச்சுக்களுக்கு அது வழி வகுத்தது. மே மாதம் 2ம் திகதி உதித்து விட்டது. மூத்த இளைய சர் வாதிகாரிகளது கொலைக்கும்பல் அதிகாலையோடு மாவனல்லையில் வந்து குவியலானார்கள். ரம்புக்கணை வீதி வழியாக வந்த மூத்த சர்வாதிகாரியினது கொலைக்கூட்டம் வாள், தடி, குண்டுகள் சகிதம் மாவனல்லைப் பொதுச் சந்தைக்குப் பின் முகாமிட்டனர். இளைய சர்வாதிகாரியினது கூட்டம் அரநாயக்கா பாதையினூடாக வந்து ஹெம்மாதகம பாதையில் முகாமிட்டது. இத்தனைக்கும் மக்கள் சிலர் பொலிஸிடம் முறையிட்டு உதவி கேட்டனர். பொலிஸ் வெளியே வந்து எட்டிப்பார்த்துச் சென்று விட்டதே தவிர

கொலைக் கும்பலைத் தடுக்க எவ்விதத்திலும் முற்படவில்லை. இதற்குள் கொலைக் கும்பலுக்கும் மக்களுக்குமிடையில் கடும் யுத்தமொன்று வெடித்து விட்டது. நகரிலுள்ள மூன்று மாடி வியாபாரக் தளமொன்றின் மீது குண் டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதோடு கடைகளும் கட்டிடங்களும் உடைக் கப்பட்டு முற்றாக நாசமாக்கப்பட்டது. இவற்றைத் தடுத்து நிறுத்த பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பிரதான அரசியல்வாதி நுணுக்கமாகச் சிந்தித்துச் செயல்படுபவனாவான். அவன் ஆரம்பமாக மாவட்டத்தில் பொலிஸ் தலைவர்களை தனது விருப் பத்திற்கு ஏற்ப நியமித்துக் கொண்டான். அத்தோடு அவர் காரியாலங்களிலும் தனது ஆதரவாளர்களை நிரப்பிக் கொண்டான். ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் தனக்காக உயிரையே தியாகம் செய்யக்கூடிய கொலைக்கும்பல் களை உருவாக்கிக் கொண்டான். இதனால் தான் மேலிடத்து அனுமதி வரும்வரை பொலிஸ் அமைதியாக இருந்தது. 2ம் திகதி அன்று அரசு இனவாதக் கருத்துக்களைப் பரப்புவது கூட தடை செய்யப்பட்டுள்ளது என்று சட்டங்களையும் கண்டனங்களையும் ஞாபகமூட்டியது. ஆனால் கேகாலை மூத்த இளைய அரசியல்வாதிகள் இவற்றைக் கற்பதற்காக இப் போது தான் பாலர் பாடசாலை செல்கிறார்கள் போலும்.

லக்பிம : 06.05.2001

---

கடந்த 2ம் திகதி மாவனல்லை நகரில் இரு சாராருக்கிடையே ஏற் பட்ட மோதல் இவ்வளவு தூரம் பேரழிவுகளை ஏற்படுத்தும் அளவுக்கு வழந்தமைக்கு அது குறித்து ஏற்கனவே முறைப்பாடு செய்தும் பொலிஸ் உரிய நடவடிக்கை எடுக்காது அமைதிகாத்தமையே காரணம் என சம்பவம் நடந்த இடத்துக்கு விஜயம் செய்த அமைச்சர்கள் பலர் ``சிலுமின'' விற்கு தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நிகழ்ந்த அடுத்த சில நாட்களில் மாவனல்லையில் நிலையை அறிவதற்காக தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதில் ஈடுபட்ட இனவிவகார, ஒற்றுமை, கனியவள அபிவிருத்தி அமைச்சர் அதாவுட சென விரத்ன உடனான உரையாடலில் அவர் தெரிவித்ததாவது, ``சம்பவத்தின் அடிப்படை கப்பம் பெற்றமையாகும். அங்கு இடம்பெற்ற மோதல் பற்றி பொலிஸுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். எனினும் பொலிஸ் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பொலிஸினது செயற்பாடு தொடர்பாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு கப்பம் நிகழ்வால் பாதிக்கப்பட்டவர்களது உறவினர் களும் ஏனைய வியாபாரிகளும் பொலிஸுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

செய்தனர். அவ்விடத்தில் பொலிஸுடன் அவர்கள் மோதியுள்ளனர். அப்போது கப்பம் பெற்றோர் பெரும் கிரனேட்டுகளோடு அங்கு வந்து ஆர்ப்பாட்டக் காரர்களைத் தாக்கியுள்ளனர். பொலிஸ் அங்கு கண்ணீர் புகை பாவித்து மக்களை விரட்டினாலும் பின்னர் கப்பம் அறவிட்டோர் கடைகளைத் தீ வைக்க ஆரம்பித்ததுடன் நிலைமை மோசமாக மாறியுள்ளது.

இச்சம்பவத்துக்குப் பின்னால் ஏதோ ஒரு மறைவான சக்தியொன்று இருந்திருக்கிறதா எனக் கேட்டபோது அமைச்சர் செனவிரத்ன கூறியதாவது, இவ்வாறான சந்தர்ப்பங்களில் இலாபம் பெறுவதற்கான கும்பல்கள் செயற்படு வதற்கான இடம்பாடுகளைத் தடுக்கமுடியாது. எனினும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு குழு இதற்குப் பின்னால் இருப்பதாக தன்னால் உறுதியாகக் கூற முடியாது என்று கூறியுள்ளார். அமைச்சர் மௌலானாவிடம் வினவிய போது சம்பவத்தின் உண்மை நிலையை பொலிஸ் கூறுவதன்றால் அதை அரசாங்கத்துக்கு அறிவித்து விரைவாக நடவடிக்கை எடுத்திருக்க முடியும். இது இவ்வளவு தூரம் சென்றமைக்கு பொலிஸாரின் தவறே காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிலுமின 06.05.2001

## மாவனல்லை வன்முறைக்குப் பின்னர் இடம்பெற்றவை

மருதானைச் சம்பவம் நடந்ததும் நடக்காததும்

கடந்த நான்காம் திகதி மருதானைப் பள்ளிக்கு முன்னால் ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடாத்த ஏற்பாடா கியிருந்தது. முஸ்லிம் அரசியல் கட்சியொன்று இதனைத் தலைமை தாங்கி நடாத்த முன்வந்த போதும் தொழுகைக்கு முன்னரே அவர்கள் அதிலிருந்து வாபஸ் வாங்கி விட்டார்கள். மாவனல்லை வன்முறைகளைக் கண்டித்து நடாத்தப்படவிருந்த இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொள்ளவென கொழும்பின் ஏனைய பகுதிகளிலிருந்து மருதானை ஜும்ஆப் பள்ளிவாயலுக்கு அன்று அதிக இளைஞர்கள் சமூகமளித்திருந்தனர். ஏற்கனவே ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருந்த இளைஞர்கள் தொழுகை முடிந்த பின்னர் மருதானைப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக (பள்ளிவாயல் நுழைவாயில் அருகே) நின்ற வண்ணம் ``அல்லாஹ் அக்பர்`` என்று கோஷம் எழுப்பிய தோடு தமது ஆத்திரத்தை வெளியிட வேறு வழியில்லாமல் அங்கு நின்றி ருந்த ஒரு சில வாகனங்களின் கண்ணாடிகளையும் உடைத்து விட்டனர்.

பின்னர் ஸ்தலத்துக்கு வந்த பொலிஸ் மற்றும் விஷேட அதிரடிப்படையினர் கண்ணீர்ப் புகைகுண்டுகளையும் கைத்தடிகளையும் பிரயோகித்து இவர்களை கலைத்துவிடவே அவர்கள் நாலா பக்கங்களிலும் சிதறி ஓடினர். பஞ்சிகாவத்தை நோக்கி வந்த சில இளைஞர்கள் அங்கிருந்த பெற்றோல் நிரப்பு நிலையமொன் றின் எண்ணெய் அளவுமானிப் பெட்டிகளை கீழே வீழ்த்திவிட்டு ஓடியிருக்கி றார்கள். உண்மையில் நடந்தது இதுதான்.

ஆனால் இச்சம்பவத்தை அரசாங்கத்தின் ஒரு பக்க ஊதுகுழல்களும் சில தனியார் ஊடகங்களும் பூதாகரப் படுத்தியதோடு அன்றிரவு அரசாங்கம் மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்தது. தமது நியாய மான எதிர்ப்பு உணர்வுகளை வெளிப்படுத்தி பாராபட்சமாக நடந்த பொலிஸாரிடம் நீதி கோரிய இக்குழுவை ஊடகங்கள் தீய சக்திகளாகவும் இனவாதிகளாகவும் சித்தரிக்க முயன்றன.

இது தொடர்பில் 26 பேரையும் கைது செய்திருப்பதாக பொலிஸ் அறிவித்திருந்தது. இதற்கிடையில் பெரும் இனக் கலவரமொன்றை ஏற்படுத்திய தில் மாவனல்லையில் கைது செய்யப்பட்ட சிங்களவர்கள் ஏழு பேர் மட் டுமே. பல கோடி ரூபாய்ப் பெறுமதியான வியாபார ஸ்தலங்களையும் தொழிற்சாலைகளையும் அவையனைத்தையும் விட முஸ்லிம்களின் புனிதஸ்த லங்களான பள்ளிவாயல்களையும் அவர்களின் உயிரிலும் மேலான குர்ஆன் பிரதிகளையும் தீயிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கிய மாவனல்லை இன வெறியாட்டத்தை அரச ஊடகங்கள் சிறிதுபடுத்தி மூடிமறைக்க முயற்சித்தன. மாவனல்லைச் சம்பவத்தை விட மருதானையில் ஒரு சில முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தையே பூதாகரமாக்கி காட்ட விளைந்தன. மட்டுமன்றி மாவனல்லைச் சம்பவத்துக்கும் ஆளும் கட்சி அரசியல்வாதிகளுக்கு மிடையே எந்தத் தொடர்பும் கிடையாது என தப்பிக்க முயன்றன.

### தாக்கப்பட்ட மூதூர்

கடந்த 04.05.2001 ஆம் திகதி மூதூரில் மாவனல்லைச் சம்பவத்தைக் கண்டித்து அனைத்துப் பள்ளிகளிலும் குத்பாப் பிரசங்கம் நிகழ்த்த மஜ்லிஸுஷ் ஷுறாவினால் முடிவெடுக்கப்பட்டு நடாத்தப்பட்டது. இதேபோன்று கடந்த 06.05.2001 ஆம் திகதி அன்று ஈராக் விளையாட்டுக் கழகத்தின் பெயர் குறிப்பிட்டு மாவனல்லைச் சம்பவத்தைக் கண்டித்து துண்டுப் பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அன்றிரவு சுமார் 11.45 மணியளவில் பொலிஸ் அதிகாரிகளின் துணையுடன் சிங்களக் குண்

டாந்தடிகள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள் பலவற்றை தீவைத்துக் கொளுத்தினர். முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஐந்து கடைகளும் சிங்களவர் களுக்குச் சொந்தமான நான்கு நடைபாதை கொட்டில்களும் (பெறுமதியற்றவை) இதில் எரிந்து சாம்பலாகியது. சிங்களவர்களுக்கு இதில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. கொம்யுனிகேஷன், ஸ்டுடியோ, வீடியோ கடை, கம்யூட்டர் நிலையம், ஹோட்டல், புடைவைக் கடை என்பவற்றை தீயிட்டுக் கொளுத்தினர்.

இவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா முப்பது இலட்சத்துக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின் பின்னர் துண்டுப்பிரசுரமே இதற்குக் காரணமென குற்றம் சாட்டப்பட்டு ஈராக் விளையாட்டுக் கழகத் தலைவர் கைது செய்யப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் தீவைத்த குண்டர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மூதூரில் சுமார் முப்பதுக்கும் குறைவான சிங்களக் குடும்பங்களே இருக்கின்ற போதும் இவ்வாறான ஓர் சம்பவம் இடம்பெற்றது குறித்து முஸ்லிம்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

### கல்முனையில் இடம்பெற்ற கடையடைப்பு

மாவனல்லையில் இடம்பெற்ற கலவரத்தில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்க்கப் பட்ட தாக்குதல்களைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் முஸ்லிம்கள் தமது எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் கரையோர முஸ்லிம் கிராமங்களில் கடையடைப்பு செய்யப்பட்டுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. முஸ்லிம் விழிப்புக் குழு என்ற அமைப்பினால் ஏற் பாடு செய்யப்பட்ட இந்த ஹர்த்தாலினால் கடந்த ஆறாம் ஏழாம் திகதிக ளில் கல்முனை-அக்கரைப்பற்று, அம்பாறை-கல்முனை ஆகிய போக்குவரத்துப் பாதைகள் வாகனங்கள் எதுவுமின்றி வெறிச்சோடிக் கிடந்தது.

### அம்பாறை : தணிந்து போன முறுகல்

மாவனல்லையில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறுசிறு அசம்பாவிதங்கள் பரவலாக நடந்துள்ளது. தீவிரவாத சிங்களக் கும்பல்கள் மென்மேலும் இனக்கலவரத்தைத் தூண்ட முயன்றிருக்கி றார்கள். சில முஸ்லிம்களும் உணர்ச்சிவசப்பட்டு மேற்கொண்ட சில நடவ டிக்கைளும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. கடந்த மே 6ம் திகதி அம்பாறை நகரத்தைச் சேர்ந்த மீன் வியாபாரி ஒருவர் நிந்தவூர் பிரதேசத்தில் மீன் கொள்வனவுக்காக சென்றிருந்த போது இவர் ஒரு சிங்களவர் என் பதை அறிந்த ஒரு முஸ்லிம் இளைஞன் அவ்வியாபாரியை தாக்க முயன்றி

ருக்கிறார். பின்னர் ஊர் மக்கள் வியாபாரியைச் சமாதானம் செய்து மேல திக மீன்களையும் கொடுத்து அனுப்பிவைத்துள்ளனர். எனினும் இந்தச் செய்தி அம்பாறை நகரில் கசியவே அங்கிருந்த சில இனவாதிகள் நகரத்தி லுள்ள பள்ளிவாயலை தாக்கப்போவதாக சூளுரைத்துள்ளனர். இவ்விடயம் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது பள்ளிவாயலுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## தென்மாகாணத்தில் நடைபெற்ற எதிர்ப்பு ஊர்வலம்

மாவனல்லை, கனேதென்னை, ஹெம்மாதகமை, திப்பிட்டிய ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் சிங்கள இனக் கும்பல்கள் திட்டமிட்டு மேற் கொண்ட தாக்குதலையும் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சேதங் களை ஏற்படுத்திய தீவைப்பு சம்பவங்களையும் கண்டித்து அம்பாந்தோட்டை யில் அமைதியான எதிர்ப்பு ஊர்வலங்களில் முஸ்லிம்கள் ஈடுபட்டார்கள். இவ் ஊர்வலம் அமைதியாக முடிந்ததாகவும் பொலீசார் தெரிவித்துள்ளனர்.

## மல்வானை கண்ட சமாதான யாத்திரை

நாட்டில் ஏற்பட்ட முஸ்லிம் சிங்களவர் பிரச்சினையை அடுத்து பிய கம பொலிஸ் பொறுப்பதிகாரி அவர்களால் ஊர் சிங்கள, முஸ்லிம் பிர முகர்களைக் கொண்ட ஒரு கூட்டம் 05.05.2001 அன்று நடாத்தப்பட்டது. பிரதேசத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்காக 08.05.2001 ஆம் திகதி பிரதேச சிங்கள முஸ்லிம் மக்களால் சமாதானப் பாதை யாத்திரையொன்று போவதென்றும் முடிவெடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் கடந்த 08.05.2001 ஆம் திகதி சாமாதானப் பாதை யாத்திரை சென்றாலும் அதில் 95% வீதமானோர் முஸ்லிம்களாகவே காணப்பட்டனர்.

## லண்டனில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்

மாவனல்லையில் இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்து மே 11ம் திகதி லண்டனில் இலங்கை முஸ்லிம்கள் அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினர். பிரித்தானிய வாழ் முஸ்லிம் கலாசாரக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் ஜும்ஆத் தொழுகைக்குப் பின்னர் இடம்பெற்றது. லண்டன் கொல்லின் டேல் பகுதியிலுள்ள ஜும்ஆப் பள்ளியில் தொழுகையை முடித்துக் கொண்டு வாகனங்களில் ஊர்வலமாக வந்த முஸ்லிம்கள் லங்கா காஸ்கேற்றிலுள்ள இலங்கை தூதுவராலயத்துக்கு முன்பாக அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்திய பின்னர் இலங்கைத்

# மாவனல்லைக் கலவரம்

# அழிவுகள், சேதங்கள் பற்றிய விபரம்

| இடம் | விபரம் | சேதப்படுத்தப் பட்டவை | முற்றாக அழிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| மாவனெல்லை | கடைகள் | 11 | 114 |
| | வீடுகள் | 13 | 5 |
| | மோட்டார் சைக்கிள்கள் | 1 | 4 |
| | கார்கள் | 3 | 2 |
| | வேன்கள் | 3 | 3 |
| | பஸ்கள் | 0 | 1 |
| | ஆடைத் தொழிற்சாலை | 1 | 1 |
| | பெற்றோல் நிரப்பு நிலையம் | 0 | 1 |
| | இறப்பர் தொழிற்சாலை | 0 | 1 |
| கனேதன்னை | கடைகள் | 4 | 8 |
| | வீடுகள் | 35 | 1 |
| | பள்ளிகள் | 0 | 2 |
| | வாகனங்கள் | 0 | 3 |
| ஹிங்குல | கடைகள் | 2 | 6 |
| | வீடுகள் | 15 | 0 |
| | வாகனங்கள் | 0 | 2 |
| | பள்ளி | 1 | 0 |
| உயன்வத்தை | வீடுகள் | 8 | 0 |
| கப்பகொட | வீடுகள் | 1 | 0 |
| | லொறிகள் | 0 | 1 |
| திப்பிட்டிய | கடைகள் | 2 | 0 |

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டினால் ஒருவர் கொல்லப்பட்டதோடு 14 பேர் காயமடைந்தார்.

தூதுவரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்ததாக லண்டனிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. புத்தளம் பள்ளிவாசல் சம்பவம் தொடக்கம் பல் வேறு சம்பவங்களில் முஸ்லிம்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருவதாக வும் உலக நாடுகளின் கவனத்துக்கு இவற்றை எடுத்துரைக்க தாங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக இனவாதிகள் கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறைகள் நிறுத்தப்பட்டாலே இனங்களுக்கிடையே சௌஜன்யம் உருவாக வாய்ப்புண்டு எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

### கிண்ணியாவில் துஆப் பிரார்த்தனை

கடந்த மே 11ம் திகதி கிண்ணியாப் பிரதேசத்தின் அனைத்துப் பள்ளி வாயல்களிலும் மானெல்லை முஸ்லிம்களுக்கும் பொதுவாக சர்வதேச ரீதி யாக பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கும் பாதுகாப்பு வேண்டி விஷேட துஆப் பிரார்த்தனை ஒன்று இடம்பெற்றது. அன்று இடம்பெற்ற குத்பாப் பிரசங்கங்களிலும் இவ்விடயம் தொடர்பாக பேசப்பட்டது. இந்நிகழ்வை கிண்ணியா ஜம்இய்யதுல் உலமா ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


நன்றி

1. The Situation Report Prepared by, Meelparvai facts-finding Committee.
2. மீள்பார்வை இதழ் 59.
3. ராவய 2001.05.06
4. சிலுமின 2001.05.06
5. லக்பிம 2001.05.06



# பேருவளை இனமோதல் 2002 05

## பேருவளை கண்ட நான்காவது வன்முறை

05.04.2002 அன்று பேருவளையில் இடம்பெற்ற சிங்கள-முஸ்லிம் இனமோதல் பேருவளை கண்ட நான்காவது வன்முறையாகும். பேரினவாதம் சந்தர்ப்பம் வாய்க்கின்ற போதெல்லாம் தென்னிலங்கை முஸ்லிம்களைக் குறி வைத்துத் தாக்குவதற்குத் தயங்கவில்லை என்பதையே இந்நிகழ்வும் காட்டியிருக்கிறது. முஸ்லிம்களுக்கு எதிரான இப்பேரின வாதப் பாய்ச்சல் நமக்கொன்றும் புதிய விடயமல்ல. எனினும் முஸ்லிம்கள் மீதான இத்தாக்குதலை சில ஊடகங்களும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் வெறுமனே குழுக் கலவரமாகக் காட்ட முனைந்தமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

ஏப்ரல் 5ம் திகதி வெள்ளிக்கிழமை முஸ்லிம் மீனவர்களுக்கும் சிங்கள மீனவர் குடும்பம் ஒன்றுக்குமிடையில் பாதை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையே, இறுதியில் இனக்கலவரமாக விஸ்வருபம் எடுத்தது. ``மருதானை`` பேருவளை நகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு பிரதேசம். முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இப்பிரதேசத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சிங்களக் குடும்பங்கள் வாழ்கின்றன. இது கடற்கரைக்கு சமீபமாக அமைந்திருக்கின்றது.

இப்பிரதேச மக்களின் பிரதான தொழிலாக மாணிக்க வியாபாரம், மீன் பிடித்தொழில் என்பவற்றைக் குறிப்பிடலாம். ஏனையோர் இதர சிறு வியாபாரங்களில் ஈடுபடுவதோடு, கூலி வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அரச, தனியார் துறைகளில் தொழில்புரிவோர் மிகக்குறைவு என்று சொல்லலாம்.

இப்பகுதியில் கடற்கரைக்கு அண்மித்து அமைந்துள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணியிலே மிக நீண்ட காலமாக சிங்களக் குடும்பம் ஒன்று வாழ்ந்து வருகின்றது. இவர்களுடன் முஸ்லிம்கள் மிக நெருக்கமாக உறவுகளைப் பேணி வந்தனர். கடந்த காலங்களில் பேருவளைப் பிரதேசத்தில் ஏற்பட்ட பல இனமோதல்களின்போது இக்குடும்பத்தினர் முஸ்லிம்கள் தரப்பில் இருந்து எவ்விதப் பிரச்சினையையும் எதிர்கொள்ளவில்லை என்பது மனங்கொள்ளத்தக்கது.

சில வருடங்களுக்கு முன்பு இக் காணி தொடர்பில் வெளியிடப்பட்ட சட்டத்தீர்ப்பிற்கிணங்க சிங்களக் குடும்பத்தினருக்கு 14 பேர்ச் நிலம் வழங்கப்பட்டது. அதேநேரம் இந்தக் குடும்பத்தினரும், மீனவர்களும் பயன்படுத்துவதற்காக பொதுப்பாதையொன்றும் 3 மீற்றர் நீளத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது.




**சேதப்படுத்தப்பட்ட வீடுகள்**

எனினும் சிங்களக் குடும்பத்தினர் இந்தப்பாதை தொடர்பில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியதோடு, தமக்கு மின் இணைப்பு பெறுவதற்கான மின் கம்பங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அனுமதியின்றி பாதையில் நாட்டியதனைத் தொடர்ந்து முஸ்லிம் மீனவர்களுக்கும் சிங்களக் குடும்பத்தினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இம்மோதல் போத்தல், கல்வீச்சுக்களோடு ஆரம்பித்தது. பின் சிலர் காயப்படும் அளவுக்கும் வீடுகள் தாக்கப்படும் அளவுக்கும் வளர்ந்தது.

இச்சந்தர்ப்பத்தில் பிரச்சினையை சுமுகமான நிலைக்கு கொண்டுவருவதற்காக பொலிஸ் வரவழைக்கப்பட்டனர். என்றாலும் பொலிஸாரினால் நிலமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாது போனதோடு பொலிஸுடன் தனிப்பட்ட குரோதம் வைத்திருந்த சிலர் பொலிஸை தாக்க இதனை சந்தர்ப்பமாகவும் பயன்படுத்திக் கொண்டனர். இது பிரச்சினையை மேலும் வளர்க்கக் காரணமாகியது.

மாற்று மதத்தினருடன் ஏற்படுகின்ற பிணக்குகளின்போது முஸ்லிம்கள் மிக நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். இச்சம்பவத்தில் முஸ்லிம் இளைஞர்கள் முன்யோசனை இன்றி அவசரப்பட்டு சிங்கள குடும்பத்தினருடன் மோதியது மட்டுமன்றி அவர்களின் உடமைகளிலும் கைவைத்ததன் விளைவாகவே மோதல் வலுத்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அதேநேரம் மின்கம்பம் நாட்டுவதில் ஏற்பட்ட பிரச்சினை பின்பு இனமோதலாக வெடித்ததற்கு சிங்களக் குடும்பம் மற்றும் பொலிஸாரின் பக்கச்சார்பான நடவடிக்கைகளும் கூட காரணமாக அமைந்ததையும் யாரும் மறுத்துவிட முடியாது. ஏனெனில் பிரச்சினையின் போது சிங்களக் குடும்பம் பயன்படுத்திய பொருட்களையும் இரசாயணக் கலவைகளையும் நோக்குகின்றபோது அவர்கள் தாக்குதலுக்கு முற்கூட்டியே தயார்நிலையில் இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

மருதானையின் மத்தியில் ஏற்பட்ட இவ்வன்முறை பின்னர் மஹகொடை, அலுத்கம, மொரகல்லை போன்ற பகுதிகளுக்கும் காட்டுத் தீ போல் பரப்பப்பட்டது. மொரகல்லை, ஹெட்டிமுல்ல போன்ற பிரதேசங்களில் இருந்து சிங்களக் கும்மல்கள் படையெடுத்து வந்து முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதிகளில் வீடுகளைத் தாக்கி சில வீடுகளை எரிக்கவும் செய்தனர்.

மருதானையின் எல்லைப்புறத்தில் சிங்கள இனவாதக் கும்பல்கள் முஸ்லிம்களின் 3 வீடுகளை முற்றாக தேசப்படுத்தி, இரு வீடுகளை எரித்ததோடு, அநேக பொருட்களையும் கொள்ளை அடித்துச் சென்றனர். இவ்வன்முறையின் போது தீ மூட்டப்பட்ட வீடுகளை அணைக்க முஸ் லிம் இளைஞர்கள் எல்லைப்புறத்திற்கு விரைந்தபோது பொலிஸாரினாலும் சிங்கள இனவாதக் குண்டர்களாலும் சுடப்பட்டும் கிரனைட் வீச்சினாலும் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலில் அஸ்லம் (23), இர்பான் (23), ரிழ்வான் (22) மூவ ரும் கொல்லப்பட்டனர். 14 பேர் கடும் காயங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இரு உல்லாசப் பயண கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இவற்றின்



அஸ்லம் இர்பான் ரிழ்வான்

பெறுமதி சுமார் 10 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுதவிர இரண்டு இயந்திரப்படகுகளும் முற்றாக சேதப்படுத்தப்பட்டன.

வன்முறை பரவிய மஹகொடையில் வைத்து முஸ்லிம் இளைஞர்கள் சிலர் ஹெட்டிமொல்லையைச் சேர்ந்த சிங்களக் குண்டர்களால் தாக்கப் பட்டு, இரு கடைகளும் எரிக்கப்பட்டன. இதனால் சுமார் ஒரு இலட் சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதுதவிர வீடொன்றும் முற்றாக எரித்து நாசமாக்கப்பட்டதுடன் 3 வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. 2 பேர் காயப்படுத்தப்பட்டனர்.

மொரகல்லைப் பகுதியில் சிங்கள இனவாதிகள் ஒன்றிணைந்து வாகனங்க ளில் பயணம் செய்த முஸ்லிம் பொதுமக்களை அடையாளப்படுத்தி அவர்களைத் தாக்கியதோடு வாகனங்களையும் சேதப்படுத்தினர். இத்தாக்குத

வில் பெண்களும், மதகுருமாரும் ஈடுபட்டதாக தாக்கப்பட்டவர்களின் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக ஜே.வீ.பி உறுப்பினர்கள் இதில் மும்முரமாக இருந்தார்கள் என சில நடுநிலையான சிங்கள சகோதரர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு வாகனங்களில் சென்றபோது தாக்கப்பட்டவர்கள் சுமார் 75 பேருக்கும் அதிகமானோர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இப்பிரச்சினையில் எவ்விதத்திலும் தொடர்புபடாத, சிங்கள மக்கள் எவருமே முஸ்லிம் பிரதேசங்களைக் கடந்து சென்றபோது தாக்கப்படவில்லை என்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. இத்தகைய பாரிய இழப்புக்களையும் சேதங்களையும் ஒரு சில மணித்தியாலங்களுக்குள் முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டிய அளவுக்கு சிங்கள இனவாத சக்திகள் முஸ்லிம்களுக்கு எதிராக நிறுவனமயப்பட்டு செயற்பட்டார்கள் என்பதை மருதானைச் சம்பவம் நமக்கு தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

வேண்டாத மனைவியின் கைபட்டாலும் குற்றம் கால் பட்டாலும் குற்றம் என்பதைப்போல் மிகச் சிறியதொரு காரணத்தை முன்வைத்தே சிங்களப் பேரினவாதம் நம்மீது சீறிப்பாயும் என்பதை முஸ்லிம்கள் நினைவில் வைத்துக் கொண்டு செயற்பட வேண்டும். அத்தகைய இனவாதப் பாய்ச்சலுக்கு வசதியான எந்த சூழலையும் நம் தரப்பில் உருவாக்கி விடக்கூடாது. ஏனெனில் தம்மை முற்கூட்டி தயார்படுத்திய நிலையிலேயே இனவாதக் குண்டர்கள் நம்மீது தாக்குதல் தொடுக்க முனையும்போது எந்த கூட்டொழுங்குகளும் இல்லாமல் பிரிந்து கிடக்கும் நாம் பாரிய இழப்புக்களையும் அழிவுகளையும் சந்திக்க நேரிடும் என்பதையே மாவனல்லைச் சம்பவம் முதல் பேருவளை நிகழ்வு வரை காட்டி நிற்கின்றது.

தென்னிலங்கை முஸ்லிம்கள் தொடர்ச்சியாக எதிர்நோக்கும் இப்பேரின அபாயங்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான நிரந்தரமான அரசியல் நடவடிக்கைகள், வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். எனினும் அத்தகைய எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. நம்மை நோக்கி மிகப் பெரியதொரு தாக்குதல் நடாத்தப்படுகின்ற போது மட்டும் அது குறித்து ஒரு சில தினங்களுக்கு உணர்ச்சிவசப்பட்டு பேசிக் கொண்டிருப்போம். பின்னர் இன்னொரு தாக்குதல் நம்மை நோக்கி நடாத்தப்படும் வரை நமது பாட்டில் இருந்து விடுவோம். 1915 இல் இடம்பெற்ற கம்பளைக்

கலவரம் முதல் பேருவளைச் சம்பவம் வரை முஸ்லிம்கள் தமது பாதுகாப்புக் குறித்து கவனயீனமாகவே இருந்து வருகின்றனர். இந்நிலை தொடருமானால் மீண்டும் மீண்டும் நாம் பேரினவாத அபாயங்களை எதிர்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## பதிவு செய்யப்பட்ட சில சாட்சியங்கள்

* நூறு வருடங்கள் பழமைவாய்ந்த இக்காணி முஸ்லிம்களுக்குச் சொந்தமானது. அதில் நீண்டகாலமாக சிங்களக் குடும்பமொன்று வாழ்ந்து வருகின்றது. கடந்த ஆறு அல்லது ஏழு வருடங்களுக்கு முன்னர் இந்த வழக்குப் போடப்பட்டது. சிங்களக் குடும்பம் நீண்ட காலமாக இதில் வாழ்ந்ததனால் அவர்களுக்கு 14 பேர்ச் நிலம் உரித்துடையது என நீதி மன்றம் தீர்ப்பளித்தது. மேலும் லெல்லம் (மீனவ உபகரணங்களை வைப்பதற்கான இடம்) வீட்டுக்குப் போவதற்கான பாதை என்பவற்றுக்காக ஒரு பொதுப் பாதையும் 10 அடி அகலத்தில் வழங்கப்பட்டது. எனினும் இந்தச் சலுகைகளையும் மீறி இச்சிங்களக் குடும்பம் தமது வேலியை இன்னும் இரண்டு அடி முன்னுக்கு அமைத்தது. இது சம்பந்தமாக பொலிஸில் முஸ்லிம்கள் முறைப்பாடு செய்த போது அவர்கள் எந்த எக்ஷனும் எடுக்கவில்லை. இது மட்டுமன்றி கரன்ட் எடுக்க கணுவொன்றையும் நாட்ட முற்பட்டபோது முஸ்லிம்கள் 40 பேர் ஒப்பமிட்டு அதனை ஆட்சேபித்தார்கள். பிரதேச செயலகம் இவ்விடயத்தை கவனத்தில் எடுக்க முன்ப [illegible] வ நாட்டினர். இதன் காரணமாகவே பிரச்சினை வெடித்த [illegible] த்தை நோக்கும்போது சிங்களவர்கள் பூரண தயார் நிலையில் [illegible] ந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. பிரச்சினை நடந்தபோது பொலிஸிற்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டும் தாமதமாகவே வந்தனர். பொலிஸ் வந்து பிரச்சினையை சுமுகமாக்க அனைவரையும் ஓரமாக்கிய போது எங்கடவர்கள் அவசரப்பட்டு பொலிஸிற்கு அடிக்கலாயினர். இதனால் பொலிஸார் உயரத்திற்குச் சுட்டனர். (சம்பவத்தில் தொடர்புபட்ட ஒருவர்)

---

பிரச்சினை நடந்து கொண்டிருக்கும்போது எனது மகன் கடைக்குச் சென்றிருந்தார். வரும் வழியில் பொலிஸாரைக் கண்டபோது சிங்கள வீட்டுக்குப் பக்கத்தில் ஓடி மறைந்திருக்கிறார். பின்பு அவரைப் பிடித்து அடித்து அசிட் வீசியுள்ளனர். இது அவர்கள் கலவரத்திற்கு முன்கூட்டியே

தயார் நிலையில் இருந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. இப்பிரச்சினையை சிங்களவர்கள் தான் இனக் கலவரமாக மாற்றினார்கள். ஏனெனில் இது குறிப்பிட்ட சிங்களக் குடும்பத்திற்கும் முஸ்லிம் மீனவர்களுக்குமிடையில் ஏற்பட்ட பிரச்சினை.

(அசிட் வீசப்பட்டு காயப்பட்ட சிறுவனின் தந்தை)

---

சிங்களவர்கள் சூட் பண்ணியதால்தான் நான் காயப்பட்டேன். இரண்டு பெரும் காயம் ஏற்பட்டிருக்கிறது. என்னை அனுமதித்த நாகொடை வைத்தியசாலையில் அவ்வளவு திருப்திகரமான கண்காணிப்பு கிடைக்கவில்லை. துவேஷம் காட்டப்பட்டது. பாதிக்கப்பட்ட சிங்களக் குடும்பத்தினரை கொண்டு போய் விட்டவர்கள் முஸ்லிம்களே. பொலிஸ் அஸ்லம் என்பவருக்குச் சுட்டபோதுதான் எனக்கும் காயம் ஏற்பட்டது. முஸ்லிம்களின் வீடுகள் எரிகின்றன. வந்து அணையுங்கள் என்று சொல்லப்பட்டது. அதைத் தொடர்ந்து முஸ்லிம் இளைஞர்கள் அந்தப் பக்கம் போய் வீடுகளை அணைத்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூடு கேட்டது. சிங்களவர்கள் தூரத்திலேயே இருந்தனர். பொலிஸ்தான் கிட்ட இருந்தது. சிங்களவர்கள் சுட்டிருந்தால் பொலிஸிற்குப் பட்டுத்தான் எங்களுக்குப் பட வேண்டும்.

(காயப்பட்ட 21 வயது நபர் ஒருவர்)

---

சிங்களக் குடும்பம் மின்சாரக் கணுவை சட்டவிரோதமாக நாட்டிய போது 10 பேர் கொண்ட முஸ்லிம் குழுவொன்று அவர்களுடன் பேசுவதற்குச் சென்றனர். ஏனையவர்கள் சற்றுத் தள்ளி நின்றார்கள். பேச்சு ஆரம்பமாகி சிறிது நேரத்தில் வாய்த்தர்க்கங்கள் ஏற்பட்டது. பின்பு அது உக்கிரமடையவே சிங்களப் பெண்கள் தம்பிலா என்று கூச்சலிட்டார்கள். அடிக்கவும் முற்பட்டார்கள். தாங்கள் மரணிப்பதாயின் தம்பிலா 25 பேருடன்தான் மரணிப்போம் என சத்தம் போட்டுக் கொண்டு கற்களை வீசத் தொடங்கினார்கள். இக்கல்வீச்சு படிப்படியாகக் கடுமையானது. சம்பவம் பொலிஸிற்கு அறிவிக்கப்பட பொலிஸ் வந்தது. பொலிஸ் ஜீப்பைக் கண்டபோது பெரும்பாலானோர் ஓடினர். அவர்களை அழைத்து பிரச்சினை என்ன என்று கேட்டபோது விடயத்தைச் சொன்னார்கள். அப்போது பிரச்சினையை முடித்துத் தருவோம் என்ற குரல் கேட்ட அதேவேளை சூட் பண்ணுவோம் என்ற குரல்களும் கேட்டன. இந்நிலையில் பொலிஸுடன் தனிப்பட்ட முறையில் ஏற்கனவே பிரச்சினைப் பட்டிருந்த

ஒரு சிலர் பொலிஸாரைத் தாக்க முற்பட்டனர். இக்குழுவினரை முஸ்லிம்கள் தடுக்க முயற்சித்தார்கள். எனினும் கல்வீச்சியின் மூலம் ஓ.ஐ.சீ. இற்கு ஒரு காயம் ஏற்பட்டது. மேலும் தூரத்திலிருந்து வந்த கல்வீச்சு பொலிஸ் ஜீப்பின் கண்ணாடியில் பட்டது. பொலிஸார் நிலையத்திற்குத் திரும்பியபோது சிங்களவர்கள் இடை மறித்து தம்மை முஸ்லிம்கள் தாக்குகின்றார்கள் எனவும் தமது வீடுகளை உடைக்கின்றார்கள் எனவும் சொல்லியிருக்கிறார்கள். இதே சந்தர்ப்பத்தில் பல முஸ்லிம் வீடுகள் எரிக்கப்பட்டு வள்ளங்களும் சேதமாக்கப்பட்டன. பொலிஸாரும் அவர்களுக்குச் சார்பாகவே செயற்பட்டார்கள்.

(சம்பவத்தில் காயப்பட்ட ஒருவர்)

## சேத விபரம்

(மருதானை, மஹகொட போன்ற பிரதேசங்களில் ஏற்பட்ட சேதங்கள்)

| | |
|---|---|
| கொல்லப்பட்டோர் | 03 (அஸ்லம் 23, ரிழ்வான் 23,இர்பான் 18) |
| எரிக்கப்பட்ட கடைகள் | 02 (75,000 ரூபாய், 35,000 ரூபாய்) Tourist shop 02 ( 1.5 million) |
| சேதப்படுத்தப்பட்ட வீடுகள் | 10 (பொருட்களும் கொள்ளையிடப்பட்டன) |
| எரிக்கப்பட்ட வீடுகள் | 03 |
| காயப்பட்டோர் | 15 பேர் |
| சேதப்படுத்தப்பட்ட படகுகள் | 02 |
| சேதப்படுத்தப்பட்ட சைக்கிள்கள் | 10 இற்கு மேல் |
| பயணத்தின் போது தாக்கப்பட்டவர்கள் | 75 இற்கு மேல் |

(இச்சம்பவத்தில் பெண்கள், பௌத்த குருமார்களும் ஈடுபட்டிருந்தனர்)

இச்சம்பவத்தில் சிங்களவர் தரப்பில் 04 வள்ளங்களின் எஞ்சின்கள் சேதப் படுத்தப்பட்டதோடு ஒரு பலகை வீடும் ஒரு கல் வீடும் எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**காயப்பட்டோர் விபரம்**

1. ஏ.எஸ்எம். பிஷ்ர் (26) - கிரனைட் வீச்சு
2. முனவ்வர் (முனா 22)- கிரனைட் வீச்சு
3. ஹிஷாம் (21) - பொலிஸ் சூடு
4. ரிஸ்னி - பொலிஸ் சூடு
5. ரில்வான் - பொலிஸ் சூடு
6. ரிம்ஸான் - கிரனைட் வீச்சு
7. ஹிஷாம் - கிரனைட் வீச்சு
8. மபாஸ் - அசிட் வீச்சு
9. சுல்பிகார் - துப்பாக்கிச் சூடு
10. ரம்ஸீன் - கிரனைட் வீச்சு
11. இம்தியாஸ் - கிரனைட் வீச்சு
12. அஸீம் - கிரனைட் வீச்சு
13. ரமீஸ் - கிரனைட் வீச்சு
14. அகூன் - கிரனைட் வீச்சு
15. காமில் - கல் வீச்சு

## வெளிவரயிருப்பது

# சிங்கள - முஸ்லிம் இனமோதல்கள்

**ஒரு சமூக - அரசியற் பார்வை**

(பகுதி இரண்டு)

புத்தளம் பள்ளிவாசல் படுகொலைகள்
பாணந்துறை கலவரம்
மஹியங்களை மோதல்
ஹரிப்பிட்டிய சம்பவம்
தீகவாபிப் பிரச்சினை
வடதெனிய வன்முறை
மாளிகாவத்தை மோதல்கள்
சிஹல உறுமய, வீரவிதான இயக்கங்கள்

நமது சமூக அரங்கில் செயற்படும் சேவை நிறுவனங்கள் எதுவுமே பரந்துபட்ட பொதுசனக் கவனயீர்ப்பைப் பெறவில்லை என்பதை இந்நிறு வனங்கள் விரும்பியோ/விரும்பாமலோ ஏற்க வேண்டியதாகிவிட்டது. அதற்கான நியாயம் சமூகத்தின் முதன்மையான தேவை எது என்பதில் தூர நோக்கும் தெளிந்த பார்வையும் இன்றி அவை செயற்படுவது தான். இன்று நமக்கு மத்தியில் மத்திய கிழக்கு அறபு நாடுகளின் நிதி மூலங்களில் தங்கி நின்று பணி புரியும் பல நிறுவனங்கள் இயங்குகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை பள்ளி கட்டுவதிலும் மத்ரஸாக்கள் அமைப்பதிலும் காட்டும் பிடிவாதத்தைப் பார்க்கும்போது ஆச்சரியத்தைத் தருகின்றது. கல்வி, கலாசார செயற்பாடுகள், ஆய்வு நிகழ்ச்சிகள், ஆவணப்படுத்தல் முயற்சிகளுக்கு இந்நிறுவனங்களிட மிருந்து நிதி பெறுவதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. ஈச்சம்பழ வினியோகத்திலும், உழ்ஹிய்யா கொடுப்பதிலும் அவை காட்டும் ஆர்வத்தின் கால்பங்கு கூட கல்வித்துறைக்குக் காட்டவில்லை.

Ibnukhaldoon Research Institute for Social Sciences

ISBN 955-1431-00-6